அன்பளிப்பு 40P

களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 04-06-1993

ஜயந்திபுரத்தில் பெண்புலிகள்

மட்டக்களப்பு-பொலநறுவை எல்லைப்பகுதியில் உள்ள கிராமமான ஜயந்திபுரக் காவலரண்களை பெண் புலிகளை அதிகமாக கொண்ட விடுதலைப்புலிகளின் அதிரடிப்படை அணியொன்று தாக்கியழித்தது. 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 10 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். சில இராணுவத்தினர் ஆயுதங்களைக் கீழேபோட்டு விட்டு ஓடித்தப்பினர். தப்பி ஓடிய இராணுவத்தினர் ஒருவர் 'சிவப்பு விளக்கு ஒளியைப் பாய்ச்சிய வண்ணம் வாகனம் ஒன்று முகாமுக்குள் வந்து நின்றது. நாம் எமது வாகனம் என்றே நினைத்தோம். ஆனால் "[illegible] டைகர்ஸ்" என்று சொன்னதும் தான் புலிகள் எனத்தெரிய வந்தது' என்றார். அத்துடன் அந்த அணியில் பெரும்பாலானவர்கள் பெண்கள் என்றும் சொன்னார்.

பொது அறிவின்றி ஏட்டுக் கல்வியால் மட்டும் வாழ்வின் முழுமையைத் தரிசிக்க முடியாது

தேர்வில் பங்கு பற்றிய மாணவருக்கு தலைவர் பிரபாகரன் பாராட்டு



[யாழ்ப்பாணம்]

'நாம் கற்கின்ற அல்லது செயற்படுகின்ற துறை என்ற வரம்பிற்குள் மட்டும் நாம் ஒதுங்கி நின்றுவிடக் கூடாது. அதுவும் ஏட்டுக் கல்வியோடு நின்றுவிட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக் கொள்ள முடியாது. முழுமையான சமூக மனிதர்களாக வாழ முடியாது. அன்றாட வாழ்விற்கும் தேவைகளுக்கும் பயன்படும் வகையில், நாட்டின் நடப்பியல்புகளையும் உலகத்தின் போக்குகளையும் புரிந்து கொள்ளும் வகையில் நாம் எமது பொது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதுவே எம்மை சமூகத்திற்குப் பயனுள்ள மனிதர்களாக ஆக்கிவிடுகிறது' இவ்வாறு, தியாகி அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்குப் பாராட்டும், தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்தும் தெரிவித்து, தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியின் முழு விபரமும் பின்வருமாறு:

கல்வி என்பது அறிவு சார்ந்தது. ஒருவன் தன்னைப் பற்றியும், தன் சமூக வாழ்வு பற்றியும், தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வதற்குக் கல்வி அத்தியாவசியமானது.

கல்வியறிவு ஒருவன் ஆளுமையைச் சிறப்பிக்கின்றது. அவனது வாழ்விற்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது. அவனை முழு மனிதனாக ஆக்கிவிடுகிறது.

இன்றைய அறிவியல் உலகம் விரைந்து, பரந்து, வளர்ந்து வருகின்றது. இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மனித வாழ்வும் புரட்சிகரமாக மாறிவருகிறது.

இந்த அறிவு சார் நவயுகத்தில் வரையறுக்கப்பட்ட படிப்புகள் [illegible] ஆம் விரிந்த அனுபவத்தைதரும் கொடுக்கப்போவதில்லை. எனவே, துறைசார்ந்த பள்ளி, கல்லூரிப் படிப்புகளோடு

பொது அறிவுத்திறனையும் எமது இளம் பரம்பரையினர் வளர்த்துக் [illegible] இது இன்றைய காலத்தின் தேவையாகும் கூட.

தொடர்ச்சி 14ம் பக்கம் .....

ஸ்ரீலங்காவின் இன அழிப்பில் "புளட்" பக்கத்துணை

- 15 பேர் நொச்சிமோட்டையில்
- 10 பேர் தாண்டிக்குளத்தில் படுகொலை

(வவுனியா)

வவுனியா, நொச்சிமோட்டையில் சிறீலங்கா இராணுவமும் புளட் குழுவும் இணைந்து பதினைந்து தமிழ்ப்பொதுமக்களைப் படுகொலை செய்துள்ளனர். இந்த மிருகத்தனமான சம்பவத்தின்போது இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடைந்துள்ளனர். இதில் இருவரது நிலை மிக ஆபத்தாக இருப்பதாக, வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தில் பயணிகள் மீது கொலை வெறியர்களான சிறீலங்கா இராணுவமும் புளட் குழுவும் துப்பாக்கிச் சூட்டை நடாத்தியுள்ளது.

இது ஒரு புறம் இருக்க, தாண்டிக்குளச் சோதனைச் சாவடியில் நின்ற பொதுமக்கள் மீது சிறீலங்கா இராணுவமும், புளட்டும் நடாத்திய தாக்குதலில் பத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிதறியோடிய மக்கள் மீது [illegible] முறையில், துரத்தித் துரத்தி புளட்டும் சிறீலங்கா இராணுவமும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரியவருகிறது.

தொடர்ச்சி [illegible]ம் பக்கம் .....

உள்ளே...

- ஐரோப்பாவில் இலங்கைத் தமிழர் [illegible] பூதர்களா?
- 'நேரா' நடத்திய யுத்தம்
- எரித்திரிய சுதந்திரப் போராட்டம்
- விருதுகள் - லெப்.சேரமேன்
- தந்தையும் தம்பியும் (சிறுகதை)
- ஐக்கிய நாடுகள் கவனத்திற்கு - சோமலில் நகர மேயர்

கிழக்கை துண்டுகளாக்க ஸ்ரீலங்கா திட்டம்

★ தமிழர் தாயக முழுமை என்ற பேச்சுக்கே ஆப்பு

"தமிழர் தாயக முழுமை" அங்கீகரிக்கப்பட்ட நிலையில் வடக்கையும் கிழக்கையும் இணைப்பதை எவ்விதமாவது முறியடிக்க சிறீலங்கா அரசு முயன்று வருகின்றது. இதன் அடிப்படையில், கிழக்கு மாகாணத்தின் 27 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 10 பிரிவுகளை மட்டும் தமிழர்களுக்குக் கொடுப்பது எனவும் 9 பிரிவுகளை முஸ்லீம்களுக்கும் 8 பிரிவுகளை சிங்களவர்களுக்கு கொடுப்பது எனவும் சிறீலங்கா அரசு புதிய திட்டமொன்றை தீட்டி வருகின்றது. இனரீதியில் எல்லைகளை வகுத்தல் என்ற உத்தியைக் கையாண்டு புதிய எல்லைகளை வகுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 1948 முதல் கிழக்கு மாகாணத்தில் சிறீலங்கா அரசு தனது ஆதரவில் நடாத்திய சிங்களக் குடியேற்றங்களுக்கும் சட்டரீதியான எல்லைகளை வகுத்துக் கொள்ள முடியும். அத்துடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால், தமிழர்களின் குடிசன அடர்த்தி மாற்றப்பட்டு விட்ட பல தமிழர் தாயகப் பிரதேசங்கள், சிங்களப் பிரதேசங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுவிடும்.

அத்துடன், திருகோணமலைத் துறைமுகம் போன்ற முக்கிய பிரதேசங்களும் சிங்களப் பகுதியாக மாற்றப்படக் கூடிய வகையில் எல்லைகளை மாற்றியமைக்க வாய்ப்பு கிடைக்கிறது. மேலும், மாகாணசபைகளில் சிங்களப் பிரதிநிதிகளின் விகிதாசாரத்தைக் கூட்டவும் இது உதவுமென நம்பப்படுகிறது. அத்துடன், சிங்களப் பகுதிகள் எனக் கருதப்படும் எட்டு உதவி அரசாங்க பிரிவுகளையும் [illegible]

தொடர்ச்சி 14ம் பக்கம் .....

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

உறுதியின் வெற்றி

1961 செப்டெம்பரில் ஆரம்பமான எரித்திரிய மக்களின் விடுதலைப் போராட்டம் 1993 வைகாசி 24ல் எரித்திரியா என்னும் புதிய தேசத்தின் உதயத்துடன் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் கூறியதுபோல உலகின் அடக்குமுறை, ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் எல்லா மக்களுக்கும் தமிழீழ மக்களதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் தார்மீக ஆதரவு என்றும் உண்டு. இந்த வகையில் எரித்திரிய மக்களின் விடுதலை வெற்றியை ஒவ்வொரு தமிழீழத்தவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்.

இந்நேரத்தில், எரித்திரிய மக்கள் தமது விடுதலைக்கு என நடாத்திய தீரம் மிகு போரினை எண்ணிப் பார்க்கின்றோம். 60,000 போராளிகளின் வீரச்சாவுகளும், 40,000 எரித்திரிய மக்களின் மரணங்களும் எரித்திரிய விடுதலைக்கு உரமாக இருந்துள்ளது. எரித்திரிய மக்களை எதியோப்பிய அடக்குமுறையாளர்கள் தாங்கொணாத் துன்பங்களுக்கு உள்ளாக்கி விடுதலை உணர்வை மழுங்கடிக்க முயன்றனர். பொருளாதார உணவு மருத்துவ தடைகளை விதித்து இனஅழிப்புச் செய்ய முயன்றனர். குண்டு வீச்சுக்களாலும் இராணுவ நடவடிக்கைகளாலும் பொருளாதாரத்தை முற்றாக நாசமாக்கினர். இதனால், இன்று 90,000 குழந்தைகள் எரித்திரியாவில் யாருமே இல்லாத நிலையில் ஆதரவற்றவர்களாக நிற்கின்றனர். ஒன்றரை மில்லியன் மக்கள் சூடானிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளிநாடுகளிலும் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். எரித்திரியாவின் சனத்தொகையின் மூன்றில் ஒரு பகுதி மக்கள் இடம்பெயர்ந்த வாழ்வு வாழ்வதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. ஒரு தனிமனிதனின் ஆயுட்காலம் 46 ஆண்டுகளாக வீழ்ச்சியுற்றுள்ளது. குழந்தைகளின் இறப்பு வீதம் 1000 குழந்தைகளுக்கு 135 ஆக காணப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) தலா 70 முதல் 150 அமெரிக்க டொலராக உள்ளது. இவ்வளவு தூரத்திற்கு, எரித்திரிய மக்கள் தாங்கொணாத் துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்ட போதிலும், எரித்திரிய மக்களின் விடுதலை உணர்வை எதனாலுமே அணைக்கமுடியவில்லை. அதன் விளைவே இன்று எரித்திரியா என்னும் தேசம் உலகப் படத்தில் இடம்பெறக்காரணமாயிற்று. இதனால்தான் இதனை உறுதியின் வெற்றி எனப் பாராட்டுகிறோம்.

எரித்திரிய போராட்டமும் காலனித்துவம் உருவாக்கிய தொன்றே. எமது நாட்டைப் போலவே எரித்திரியா ஆரம்பத்தில் இத்தாலியிடமும் பின்னர் பிரிட்டிஸ் இராணுவ நிர்வாகத்தின் கீழும் அடிமையுற்றிருந்தது. எத்தியோப்பியா, அமெரிக்க ஆதரவு சக்தியாக விளங்கியதால், 1952 ல் எரித்திரிய மக்களின் விருப்புக்கு எதிரான முறையில், எதியோப்பியாவுடன் எரித்திரியா சமஷ்டி முறையில் இணைக்கப்பட்டது. அன்று முதல் எத்தியோப்பியா, எரித்திரியாவின் மேல் ஆதிக்கம் செலுத்தி படிப்படியாக சமஷ்டி முறையின் கீழ் எரித்திரியாவின் நிர்வாகம் முழுவதையும் தனது கைக்கு மாற்றிப் பின்னர் சமஷ்டி முறையை ரத்துச் செய்தது. இதுவே, எரித்திரிய மக்கள் விடுதலை வேட்கை கொண்டெழக் காரணமாயிற்று.

ஆயினும், அன்றுமுதல் 1991 ம் ஆண்டு EPLF அஸ்மராவை இராணுவ நடவடிக்கை மூலம் மீட்கும்வரை, எந்த ஒரு உலக நாடும் எரித்திரிய மக்களுக்கு உதவவில்லை. ஆனால், இராணுவ ரீதியாக எரித்திரிய பிரதேசத்தை எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி மீட்டதன் பின்னரே, எரித்திரியா பற்றி உலக நாடுகள் பேசத் தொடங்கின. ஆகவே, ஒரு விடுதலைப் போராட்டத்தில் மக்கள் தங்கள் பகுதிகளை மீட்பதும் அந்தப் பகுதிகளில் ஆட்சியை நிறுவுவதும் அவசியமானதொன்று என்பதற்கு எரித்திரிய விடுதலை சிறந்த உதாரணமாக உள்ளது ■

ஐக்கிய நாடுகள் கவனத்திற்கு அமெரிக்கா கொண்டு செல்ல வேண்டும்

■ சோமவில் நகர மேயர் வேண்டுகோள்

"தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்கு அமெரிக்கா கொண்டு செல்ல வேண்டும். தமிழீழ மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காக நடத்தும் சுதந்திரப் போராட்டத்தை அமெரிக்க மக்களும் அமெரிக்க அரசும் அங்கீகரிக்க வேண்டும். உலகில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் இந்த சோமாவில் மாநகரத்தில் வாழ்கின்றார்கள். எனவே இந்த சோமாவில சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் சகல மக்களினதும் தாயகமாகக் கருதுகிறேன். ஆதலால் அடக்குமுறை அரசுகளுக்கு எதிராக சுதந்திரப் போராட்டம் நடத்திவரும் மக்களுக்கு எமது பூரண ஆதரவை வழங்க முன்வந்துள்ளேன்"

இவ்வாறு அமெரிக்காவில் தமிழீழ தினத்தை வைகாசி 22ம் திகதி பிரகடனம் செய்த உரையாற்றிய சோமாவில் நகர மேயர் மைக்கல் ஈ குப்புவானா கூறினார். அமெரிக்க தேசியக் கொடியுடன் தமிழீழத் தேசியக் கொடியைக் குறிக்கும் கொடியாக தமிழீழத்தின் சிவப்பு நிறப்படத்தை மஞ்சள் வர்ணப் பின்னணியில் கொண்ட கொடி ஒன்று, சோமாவில் நகர மேயரால் ஏற்றிவைக்கப்பட்டது.

மாநகர் முதல்வர் மைக்கல் ஈதப்புவினால் கையொப்பத்துடன் பிரகடனம் ஒன்றும் அங்கு வாசிக்கப்பட்டது.

"இலங்கைத்தீவில்" தமிழ் மக்கள் சிங்கள மக்களிலிருந்து வேறுபட்ட ஒருதனி இனம். [illegible] மொழி, மதம், கலாச்சாரம், பல்கலைக்கழகங்கள், வரலாறு, பிரதேசம் முதலியவற்றால் முற்றிலும் வேறுபட்ட இரு வெவ்வேறு நாடுகளைக் கொண்டவர்கள். 16ம் நூற்றாண்டில் ஐரோப்பியர் சகாப்தம் இலங்கைத் தீவில் ஆரம்பமானபோது தனி நாட்டையொத்த அரசின ஈழத்தமிழர்கள் வடக்குக் கிழக்குப் பகுதியில் ஆண்டிருந்தனர். 1619 ல் போர்த்துக்கேயர் தமிழ் ஈழத்தைக் கைப்பற்றிய பொழுது தமிழ் ஈழத்தின் இறைமை போர்த்துக்கேயரிடம் சென்றது. பின்னர் ஒல்லாந்தருக்குக் கைமாறி 1796ல் பிரித்தானியரிடம் சென்றடைந்தது. 1815ல் அதுவரை கோட்டை, யாழ்ப்பாணம் எனும் சிங்கள, தமிழ் அரசர்களின் ஆட்சியாளராக இருந்த பிரிட்டிஸ் அரசு, கண்டி அரசை வெற்றி கொண்டதன் மூலம்; இலங்கைத்தீவு கொண்டிருந்த எல்லா நாடுகளுக்கும் தலைமை ஆட்சியாளராகியது. நிர்வாக காரணம் என்ற பெயரில் 1833ல் கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் பிரித்தானியர் இலங்கையிருந்த சிங்கள தமிழ் அரசுகளின் எல்லைகள் சான்றுகள் யாவற்றையும் அழித்தொழித்து தமிழ் சிங்கள தேசங்களின் வேறுபட்ட தன்மைகள் பிரதேச வேறுபாடுகள் என்பவை எதையும் கவனத்தில் எடுக்காது, இலங்கைத் தீவு முழுவதையும் ஒரே குடியேற்ற நாடாக்கி ஒரே நிர்வாகத்தைத் திணித்தனர். ஆயினும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் 150 ஆண்டுகளுக்கு பின்னரும்கூட இவ்விரு சிங்கள தமிழ் நாடுகள் தமது வேறுபட்ட தனித்துவத் தன்மையை உட்காரணிகளூடாக பேணிவந்துள்ளன.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஒற்றை ஆட்சியின் கீழ், பிரிட்டிசார் காலத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவ உரிமை படிப்படியாக குறைவடைந்தது. இறுதியில் சிங்களவர் பெரும்பான்மை இனமாகும் நிலைமை தோற்றுவித்தது.

இதனால் 1948 இல் சுதந்திரம் வழங்கப்பட்டபோது சிங்களவர் உறுதியான பெரும்பான்மை இனமாகி தமிழ் ஈழத்தவர் மீது சிங்கள ஆட்சியினைப் புகுத்தினர். இலங்கையில் சுதந்திரத்துக்குப் பின் நடந்து வந்த சட்ட நிறைவேற்று அதிகாரமுள்ள ஆட்சி காரணமாக, பிரித்தானியரால் தேயிலைத் தோட்ட தொழிலாளராக இந்திய இலங்கையில் குடியேற்றப்பட்ட இந்தியத் தமிழர்கள் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் நாடற்றவராக்கப்பட்டனர். 1987 ஜூலையில் உருவான இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் அவர்களது இலங்கைப் பிரஜா உரிமை அங்கீகரிக்கப் பட்டுள்ளதாக சொல்லப்பட்டபோதிலும் இதுவரை அது அமுல்நடத்தப்படவில்லை.

தமிழ்ப் பகுதிகளில் அரச ஆதரவிலான குடியேற்றத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டு, திருகோணமலை மாவட்டம், கிழக்கு மாகாணம் என்பவற்றில் தமிழர்களின் இனத் தனித்துவத் தன்மையும், தாயக உரிமையும் பறிக்கப்பட்டது. இதனால் கிழக்கு மாகாணத்தில் இரு சிங்கள பாராளுமன்றத் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. அத்துடன் தமிழீழத்தின் அத்து மீறிக் குடியேறியவர்களுக்கு அந்நிலம் சட்டப்படி சிங்கள அரசால் வழங்கப்பட்டது. இந்த திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் இன்றுவரைத் தொடர்கின்றது.

1956ல் சிங்களம் மட்டும் அரச மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டு தமிழர்களின் தொழில் உரிமை மறுக்கப்பட்டது. 1987 யூலையில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் தமிழையும் அரச மொழியாக ஏற்றுக் கொள்வதாகக் கூறினாலும் இதுவரை அந்த அமுலாக்கல் எதுவும் நடைபெறவில்லை.

தமிழீழ பிரதேசத்தின் மீது சட்டரீதியான அரசியலமைப்போ அல்லது சட்ட 'சர்வ அதிகார' மாற்று நிலையோ சிங்கள நாட்டிற்கு இல்லாதிருந்தபோதிலும் சிங்கள நாடானது 1972ல் முழு இலங்கைத் தீவுக்கும் ஒருதலைப்பட்சமான அரசியல் சாசனத்தை இயற்றி அமுலாக்கியது.

இந்த அரசியலமைப்பு
1) இன ஒதுக்கலுடன் புத்தம் மற்றைய மதங்களைவிட [illegible]
2) அரச மொழியாக சிங்களம் மட்டும் என்பதும் சட்ட அந்தஸ்து வழங்கியும் இதை நிராகரித்த தமிழீழ மக்கள் தமிழீழத்தை மீள அமைத்து நிலைநாட்ட 1977 வைகாசி தேர்தலில் வாக்குரிமையைப் பயன்படுத்தி ஆணை வழங்கினர்.

தமிழீழமக்கள் இலங்கை சிங்கள சாசனத்தை தம்மீது திணிக்கப்பட்ட ஒன்றாகக் கருதி, அதனை எதிர்த்தனர். சுயநிர்ணய உரிமை, பிரதேச இறைமை என்பவற்றை அமைதி வழிப்போராட்டங்கள் மூலம் வலியுறுத்தினர். ஆனால் சிறீலங்காவின் சிங்கள அரசு தனது ஆயுதப்படைகளின்

தொடர்ச்சி 15ம் பக்கம்

பிரேமதாசா கொலை :

குற்றப்புலனாய்வு துறையில் நம்பிக்கை இழப்பு

முன்னாள் சிறீலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கொலை செய்யப்பட்டது குறித்து, குற்றப் புலனாய்வுத்துறையினர் விசாரணை நடத்தி வந்தனர். ஆனால், இவர்கள் மீது நம்பிக்கை இழந்த சிறீலங்கா அரசு விசாரணையை தற்போது இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளது. பிரேமதாசா கொலை செய்யப்பட்ட இடத்தை குற்றப் புலனாய்வுத் துறையினர் தகுந்த முறையில் பாதுகாக்கத் தவறியதனாலேயே அவ்விடம் கழுவித் துடைக்கப்பட்டது என சிறீலங்கா அரசு கருதுகிறது. இதற்கிடையில் இந்த வழக்கை விசாரிக்கத் தொடங்கியுள்ள இரகசியப் பொலிசாரும், இதுவரை கொலை தொடர்பான விசாரணையில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை என அறிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன ■

சிங்கராயர் அடிகள் மாரடைப்பால் மரணம்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர் என்ற குற்றச்சாட்டில், 1982 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு 1984 வரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டிருந்த சிங்கராயர் அடிகள் யாழ்ப்பாணத்தில் மாரடைப்பால் காலமானார்.

ஐம்பது வயதுடைய இவர், சிறீலங்காவின் வெலிக்கடை, மட்டக்களப்புச் சிறைகளில் சிறீலங்காப் படைகளால் சித்திரவதைப் படுத்தப்பட்டார். இதுவே இவரை நோயாளியாக மாற்றியது. இறுதியில் வழக்கு இவருக்குச் சாதகமாக மாறும் சூழ்நிலையில் இவர் மீதான குற்றச்சாட்டை சிறீலங்காவின் சட்டமாஅதிபர் விலக்கி இவரை விடுதலை செய்தார். வெலிக்கடை சிறைப்படுகொலைகளின் கண்கண்ட சாட்சிகளுள் இவரும் ஒருவர்.

வைகாசி 10 இல் காலமான இவரின் இறுதிச் சடங்குகள் வைகாசி 12ல் யாழ்ப்பாணம் புனித மரியாள் ஆலயத்தில் நடைபெற்றது ■

அன்னை பூபதி பொது அறிவுப் போட்டி: சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவருக்கு கௌரவிப்பு

தியாகி அன்னை பூபதியின் நினைவாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா உரும்பிராய் அன்னை பூபதி கலையரங்கத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தேசிய மட்ட, கோட்ட மட்டங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரனின் ஆசிச்செய்தி வாசிக்கப்பட்டதுடன் அவரது சிறப்புப் பரிசிலும் வழங்கப்பட்டது.

உரும்பிராயில் சிவகுமாரன் ஞாபகத் தூபி முன்றலில் இருந்து விடுதலைப் புலிகளின் மாணவ அமைப்பினரின் பான்ட் இசையுடன் அனைவரும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலுடன் விழா ஆரம்பமாகியது.

இவ்விழாவில், தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரனும், மங்கள விளக்கை யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் திரு. சண்முகநாதபிள்ளை ஆகியோரும் அன்னை பூபதி ஞபகார்த்த ஒளியை கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரம் அவர்களும் ஏற்றி வைத்தனர்.

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமையில் ஆரம்பமாகிய பரிசளிப்பு விழாவில் மேற்படி தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்காக தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனால் வழங்கப்பட்ட ஆசிச் செய்தினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்ச் செல்வன் வாசித்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து இரா. சுந்தரலிங்கம் பிரான்சிஸ் யோசப் அடிகளார், ம. மகேந்திரம், மகேசன், பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசில்களைப் பெறுவோரிற்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும் கோட்ட மட்டத்தில் பரிசில்களைப் பெறுவோரிற்கு சிறப்புப் பரிசில்களையும் சான்றிதழ்களையும் தமிழ்ச்செல்வன், இரா. சுந்தரலிங்கம், பிரான்சிஸ் யோசப் அடிகளார் மற்றும் சிறப்பு விருந்தினர்களும் வழங்கிக் கௌரவித்தனர்.

இறுதியாக, நன்றியுரையைத் தொடர்ந்து தமிழீழத் தேசிக் கொடி இறக்கலுடன் விழா இனிது நிறைவெய்தியது. ■

அன்னை பூபதி நினைவாக நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற சாவகச்சேரி இந்துக் மகளிர் கல்லூரி ஆண்டு 4 மாணவன் செல்வன் வி.கோகுலனுக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பரிபாகரன் அவர்களின் சிறப்புப் பரிசினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் வழங்குவதைக் காணலாம்

உலக மாற்றத்திற்கேற்ப அறிவியல் வளர்ச்சி தேவை

மாணவர்களுடைய வளர்ச்சி எமது மக்களினுடைய வளர்ச்சி.

ஆண்டு 7ல் முதலாம் இடத்தைப் பெற்ற செஞ்சோலை மகளிர் பாடசாலை மாணவி தேவிகா ஐயாத்துரை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனிடமிருந்து பரிசினைப் பெற்றுக்கொள்வதனை காணலாம்

■ தமிழ்ச் செல்வன் தெரிவிப்பு

நிச்சயமாக எமது இலக்கின் வளர்ச்சியை, இவ்வெற்றி ஈட்டித்தரும். ஆகவே மாணவர்கள் தொடர்ந்தும் வெற்றி பெற எந்தத் தடைகள், இடர்ப்பாடுகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு எமது இனத்தின் மிகப் பெரிய சொத்தாகிய கல்வியை வளர்த்தெடுக்க வேண்டும். இவ்வாறு, அன்னை பூபதி கலையரங்கில் நடைபெற்ற அன்னை பூபதி பொது அறிவுப் போட்டி பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

எமது சந்ததி உலக மாற்றத்திற்கேற்ப அறிவியில் வளர்ந்த ஒரு சந்ததியாக உருவாக வேண்டும். இவ்வளர்ச்சிதான் எமது எதிர்கால வெற்றியைத் தரப்போகின்றது. இன்று எமது இனத்தைப் பொறுத்தவரை நாம் பல கஸ்டத்தின் மத்தியிலே எல்லாத் துறைகளையும் வளர்த்தெடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். இவற்றுள் மிக முக்கியமானது கல்வி. கல்வியின் வளர்ச்சியை ஊக்குவிக்க - மாணவர்களை அறிவாற்றல் உள்ளவர்களாக வளர்த்தெடுக்க எமது தலைவரினாலும், எமது அமைப்பினாலும் பல திட்டங்கள், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலேதான் அன்னை பூபதி அம்மா நினைவு அறிவுப் போட்டி நடாத்தப்படுகிறது.

இப்பொது அறிவுப் போட்டியில், எமது மாணவர்கள் தங்களது ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக்காட்டி உள்ளார்கள். அவர்களுடைய இந்தத் திறமைகளெல்லாம் நிச்சயமாக தொடர்ந்தும் ஊக்குவிக்கப்படும். எமது இயக்கத்தின் சார்பில் எமது மாணவ சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கு நாம் என்றென்றும் உறுதுணையாக நிற்போம் என்றார்.

கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள் உரையாற்றுகையில்,

கிராமப்புற பாடசாலை மாணவர்களே அன்னை பூபதி நினைவு அறிவுப் போட்டியில் கூடுதலான அளவு பங்குபற்றி சிறப்பாகச் சித்தியெய்தியுள்ளனர். முன்னணி பாடசாலை மாணவர்களும், நகர்ப்புற, பட்டணப் பாடசாலை மாணவர்களும் கூடியளவில் ஏனோ, இப்போட்டியில் பங்குபற்ற முன்வரவில்லை. இனிவரும் காலத்திலாவது இவர்களை இப்போட்டிகளில் பங்குபற்ற வைக்க அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் முன்வர வேண்டும் என்றார்.

இவ்விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் சிறப்புரையாற்றுகையில்

நாம் எல்லோரும் அறப் போராட்டத்தில் ஈடுபட்டு எல்லோரும் வாழ வழி செய்ய வேண்டும். நாம் எல்லோரும் வாழ வேண்டுமானால் நாம் மற்றவர்களுடன் பேசிப் பழக வேண்டும். நாம் மற்றவர்களுடன் பேசிப் பழக வேண்டுமானால் கணிதத்திலோ அன்றி விஞ்ஞானத்திலோ பேச முடியாது. பொது அறிவைப் பெற்றிருந்தாலே பேசிப் பழகமுடியும். ஆகவே எல்லாருக்கும் பொது அறிவு என்பது இன்றியமையாதது. அதனால் நாம் பொதுஅறிவுக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றார். ■

மென்மை

தாமரை இதழ்
மென்மையென்பர்
இல்லை...
தாமரையாள் மேனியிது
சிறப்பென்பர்
இவர்கள்....
போராளி மனம்
அறியாதார்!

வடபகுதி தபால்கள் மீண்டும் கடற்படையால் உடைப்பு

வடபகுதிக்கான வெளிநாட்டுத் தபால்கள் மீண்டும் கொழும்பில் வைத்து உடைக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன.

கடைசியாகக் கப்பலில் கொண்டுவரப்பட்ட வடபகுதிக்கான வெளிநாட்டுக் கடிதங்களும் கொழும்பில் கடற்படை முகாமில் வைத்து உடைத்துப் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வடபகுதிக்கான தபால்கள் இனிமேல் எக்காரணம் கொண்டும் உடைக்கப்பட மாட்டாது என்று சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் சிறில் ரணதுங்க தனக்கு உறுதியளித்துள்ளதாக, வடமாகாண பிரதித் தபால் மாஅதிபர் சேதுகாவலர் மார்ச் நடுப்பகுதியில் தெரிவித்த பிறகும் கடிதங்கள் மீளவும் உடைக்கப்படுகின்றன. உடைக்கப்பட்ட தபால்கள் குறித்து, சம்பந்தப்பட்ட கடிதங்களுக்கு உரிய விலாசதாரர்களை அஞ்சல் அலுவலகத்திற்கு அழைத்து கடிதங்களை அஞ்சல் அதிபர்கள் கையளிக்காமல், வழமைபோல் விநியோகம் செய்வதால் தபாற்காரர்கள் கஸ்டத்தில் மாட்டிக்கொள்ளும் நிலை ஏற்படலாம் என்று தபாற்காரர் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நூறுக்கும் குறைவான தபால் பொதிகள் இம்முறை யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டிருப்பது, தபால் பொதிகள் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டு உடைத்து பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதையே காட்டுகிறது என்று அஞ்சல் அலுவலக வட்டாரங்கள்தெரிவிக்கின்றன. ஒரு கிழமை இடைவெளியில் 200 தபால் பொதிகளும், ஒரு கிழமைக்கு மேல் 200 முதல் 400 தபால் பொதிகளும் இரண்டு கிழமைக்கு மேல் 400 முதல் 600 தபால் பொதிகளும் யாழ்ப்பாணம் அனுப்பப்பட வேண்டும் என்று அதே வட்டாரங்கள் கூறுகின்றன. ■

எரித்திரியா

எரித்திரிய தேசிய விடுதலைப் போராட்டம் பல அம்சங்களில் தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை ஒத்தது. ஈழத்தமிழர்களைப் போன்று எரித்திரிய மக்களும் ஒரு சிறிய தேசிய அமைப்பைக் கொண்டவர்கள். பெரிய தேசிய இனமாகிய எதியோப்பியாவின் இனவாத அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக எரித்திரிய மக்கள் தனியரசு கோரிப் போராடி வருகிறார்கள். ஆயுத வடிவிலான இந்தப் போராட்டம் கடந்த கால் நூற்றாண்டு காலமாக நடைபெற்றுவருகிறது. ஈழத் தமிழர்களைப் போன்று தேசிய நிர்ணய உரிமையின் (தனியரசு நிறுவும் உரிமையின்) அடிப்படையில் எரித்திரியர்கள் இப் போராட்டத்தை நெறிப்படுத்தியுள்ளனர்.

எரித்திரிய மக்கள் இந்த விடுதலைப் போராட்டத்தில் பெரும் வெற்றிகளை ஈட்டியிருக்கிறார்கள். அதேவேளை பாரிய உயிரிழப்புக்களையும், பொருளிழப்புக்களையும் எதிர்நோக்கியிருக்கிறார்கள். எரித்திரிய விடுதலைப் போராட்டமானது கண்ணீராலும் இரத்தத்தாலும் எழுதப்பட்ட ஒரு வீர காவியமாகும். இப்போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தேசிய விடுதலையையும் சோசலிசப் புரட்சியையும் இயக்கமாகக் கொண்ட இப் போராட்டத்தில் இறுதியாக எரித்திரிய மக்கள் வெற்றிவாகை சூடுவார்கள் என்பது திண்ணம். வீரம் செறிந்த இந்த விடுதலைப் போராட்ட வரலாற்றை இங்கு சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறோம்.

- எரித்திரிய விடுதலைப் போராட்டத்தில் இறந்த எரித்திரியப் போராளிகள், பொதுமக்கள் தொகை 150,000 ஆகும்.
- EPLF போராளிகளில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்போராளிகளாவர்.
- எரித்திரியாவின் 85% பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாக EPLF தெரிவித்துள்ளது.
- எரித்திரியப் போராளிகளின் சீருடை கட்டைக் காற்சட்டையும், மண்ணிறச் சட்டையுமாகும். இறப்பரிலான பாதணியை அணிந்துள்ள இவர்கள் AK-47 கரிமுழல் துப்பாக்கிகளையே தமது ஆயுதமாகப் பாவிக்கின்றனர்.

ஆபிரிக்காக் கண்டத்தின் வடகிழக்கு மூலையிலே அமைந்துள்ள எரித்திரியா கிழக்கு எல்லையாக செங்கடலையும், வடக்கு -மேற்கு எல்லையாக சூடானையும், தெற்கு எல்லையாக எதியோப்பியாவையும் கொண்டிருக்கிறது. கிழக்கு எல்லையாக உள்ள செங்கடல் இரா

பல அம்சங்களிலும் தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை ஒத்ததான எரித்திரிய தேசிய விடுதலைப் போராட்டமானது 30 ஆண்டுகளாக நடைபெற்று, எரித்திரியா என்ற ஒரு புதிய சுதந்திர நாடு 28-4-93 ல் உருவாகக் காரணமாகியுள்ளது. சுதந்திரத்திற்காகப் போராடிவரும் எம்மக்களும் எரித்திரிய விடுதலைப் போராட்டம் பற்றி அறிவதன் அவசியத்தை உணர்ந்து 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை இங்கு மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

ணுவ வர்த்தக ரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 124,000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட, கிட்டத்தட்ட இங்கிலாந்தின் அளவினை உடைய எரித்திரியாவின் மொத்த சனத்தொகை முப்பத்தைந்து இலட்சமாகும். அரபு -நிக்குரோ கலப்பினத்தைச் சேர்ந்த இம்மக்களின் மொத்தத் தொகையில் ஐம்பது சதவீதத்தவர் முஸ்லீம்



களாவர். மிகுதி ஐம்பது சதவீதத்தவர் கிறிஸ்தவர்களாவர். எரித்திரியாவில் ஒன்பது மொழிகள் பேசப்படுகின்றபோதிலும் பிரதான மொழியாக 'ரைகிரே' (TIGERE) என்னும் மொழியே பெரும்பாலோரினால் பேசப்படுகிறது.

19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் எரித்திரியாவின் பல பகுதிகள் எகிப்திய, துருக்கிய நிலப்பிரபுத்துவ ஆட்சியின் கீழ் இருந்துவந்தன. இதைத் தொடர்ந்து 1889 ஆம் ஆண்டு இத்தாலி எரித்திரியாவை தனது காலனித்துவ நாடாக்கியது. அன்றிலிருந்து 1941 ஆம் ஆண்டு வரை அதாவது இரண்டாம் உலக யுத்தகாலம் வரை எரித்திரியா இத்தாலிய சாம்ராஜ்யத்தின் ஆட்சியின் கீழேயே இருந்து வந்தது. இந்த இடைப்பட்ட காலத்தில் எரித்திரியாவின் தென் புறத்தில் இருந்த எதியோப்பியாவோடு தொடர்புகளையும், ஒப்பந்தங்களையும் கொண்டிருந்த இத்தாலி 1936 இல் எதியோப்பிய மன்னன் கெயிலி செலாசியின் ஆட்சியை கைப்பற்றி எதியோப்பியாவையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. எனினும் இரண்டாம் உலக யுத்தத்தின் போது இத்தாலிய சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்தது. எரித்திரியாவும், எதியோப்பியாவும் பிரிட்டிசாரால் கைப்பற்றப்பட்டபின் இவ்விரு நாடுகளில் ஆட்சிப் பொறுப்பும் பிரித்தானிய இராணுவ நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. முன்னர் எதியோப்பிய மன்னனாக இருந்த கெலிசெலாசி பிரிட்டிசாரால் மீண்டும் ஆட்சி பீடத்தில் அமர்த்தப்பட்டான்.

எரித்திரிய - எதியோப்பிய இணைப்பு

எரித்திரியாவை ஒரு சமஸ்டி அரச அமைப்பாக எதியோப்பியாவுடன் இணைக்க வேண்டுமென 1950 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டது. அமெரிக்காவும் வேறு பல நாடுகளும் இத்தீர்மானத்தை ஆதரித்தன. எனினும் ரஸ்யா இத்தீர்மானத்தை வன்மையாக எதிர்த்ததுடன், எரித்திரியா தனியான அரசாக இருப்பதற்கு அதற்கு பூரண சுதந்திரம் உண்டென்றும் வாதிட்டது. எனினும் எதிர்ப்புகளின் மத்தியில் இத்தீர்மானம் ஐ. நா. சபையில் நிறைவேற்றப்பட்டு எரித்திரியா எதியோப்பியாவுடன் சமஸ்டி அரசாக இணைக்கப்பட்டது. மேலும் கெய்லி செலாசி மன்னன் அமெரிக்க சார்பான, அமெரிக்க கைப்பொம்மையாகவே இருந்தான். இவனது ஆதரவுடன் 1952ல் எரித்திரியாவில், அமெரிக்க இராணுவத் தகவல் நிலையமொன்று செங்கடலிலும், இந்து சமுத்திரத்திலும் எதிரிகளின் நடமாட்டத்தை கவனிப்பதற்காக அமைக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு வரை எரித்திரியாவில் எந்த ஒரு தேசிய இயக்கமும் உருவாகவில்லை. எரித்திரிய பொதுமக்கள் மட்டும் ஆங்காங்கு செலாசி மன்னனுக்கு எதிராக ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்தி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

முதலாவது தேசிய விடுதலை இயக்கம்

1958 ஆம் ஆண்டு எரித்திரிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கியமான ஆண்டாகும். இந்த ஆண்டிலேயே வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்திருந்த எரித்திரியத் தலைவர்களால் எரித்திரிய மக்களின் முதலாவது தேசிய விடுதலை இயக்கமான எரித்திரிய விடுதலை முன்னணி (ERITREAN LIBERATION FRONT) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு தமது விடுதலைக்கான புரட்சியைத் தோற்றுவித்து போராட்டத்தைத் தீவிரமாக்க ஆயுதக் குழுவொன்றை அமைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டது. 1961ல் இவர்களது முதல் இராணுவ நடவடிக்கையாக பொலிஸ் படை ஒன்றின் மீதும், இராணுவப் பாசறை ஒன்றின் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து 1962ல் எதியோப்பிய மன்னன் எரித்திரியாவை சுயாட்சி அற்ற பிரதேசம் என அறிவித்ததுடன் அங்கிருந்த அரசியல் கட்சிகள், வர்த்தக சங்கங்கள் எல்லாவற்றையும் தடை செய்து எரித்திரியாவை எதியோப்பியாவின் 14-வது மாகாணமாக இணைத்துக் கொண்டான். எதியோப்பியாவின் இந்நடவடிக்கையைத் தொடர்ந்து ELF கெரில்லாக்களுக்கு மக்களின் ஆதரவு அதிகரித்தது. கெரில்லாக்களின் தொகையும் அதிகரித்தது. போராட்டம் தீவிரமாக்கப்பட்டது.

ELF அணி எரித்திரியாவை ஐந்து மாகாணங்களாகப் பிரித்து ஐந்து இராணுவத் தலைவர்களை நியமித்து போராட்டத்தை வழுப்படுத்தியது. ஆயினும் ELF [illegible] இருந்தன.

ELF அணியின் குறைபாடுகள்

ELF அணி தமக்கென்று ஒரு தெளிவான சித்தாந்தத்தைக் கொண்டிருக்கவில்லை. இன மத ரீதியாகவும் பல்வேறு பிரிவுக் குடிகளாகவும் வேறுபட்டிருந்த எரித்திரிய மக்கள் எல்லோரையும் ஓரணியில் திரட்ட இவர்கள் முயற்சிக்கவில்லை. மாகாண அடிப்படையில் இயங்கிய இவர்கள் போராட்டத்திற்குத் தேவையான நிதியைப் பொதுமக்களிடமிருந்து வரிகளை அறவிட்டும், பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தும் பெற்றுக் கொண்டார்கள். அத்துடன் பொதுமக்களில் [illegible] போன்று பிரமுகர்களையும் [illegible]. ELF அணியின் இந்நடவடிக்கைகளால் பொது மக்கள் மத்தியில் அவர்களின் செல்வாக்கு பெருமளவு குறைந்தது. போராட்டத்திலும் தேக்க நிலை ஏற்பட்டது. இதே நேரம் எதியோப்பியப் படைகள் 'கெரெக்'

தொடர்ச்சி 5ம் பக்கம் ....

எரித்திரிய பெண் போராளி

அந்நியனின்....

கை கள், வானொலிகள் மூலம் செய்திகள் பரவுகின்றன.

ஆனாலும், அன்னை பூபதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இந்தியப்படையினர் எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. மாறாக அன்னையின் உண்ணாவிரதப்போரை முறியடிக்கும் முயற்சிகளில் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

ஆதரவாளர் பிள்ளைகள் கைது

அன்னை பூபதி தனது உறுதியான உண்ணாவிரதப் போரினால் உணர்விழந்து செல்கின்றார். வைத்தியர்கள் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கின்றார்கள். ஆபத்தான கட்டத்தை அடைந்துவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு நகரும் பரபரப்படைகிறது. இந்தியச் சிப்பாய்களின் இறுக்கமான நடவடிக்கைகளும் தொடருகின்றன. வீதிக்கு வீதி இராணுவ வண்டிகள் அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போருக்கு உறுதுணையாக நின்றவர்கள், அன்னையர்களுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் கைதுசெய்யப்படுகின்றார்கள். அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் வணசிங்கா, வண. பிதா சந்திரா பெர்னான்டோ, பூபதி அம்மாவின் பிள்ளைகள், விடுதலை செய்யப்பட்டிருந்த அன்னையர் முன்னணியினரின் ஆலோசகர் கிங்ஸ்லி இராசநாயகம் மீண்டும் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் சிறை வைக்கப்படுகின்றார்கள்.

மிரட்டல்களுக்கு பணியாத திடசங்கற்பம்

வேட்டை நாய்கள் போல் வீதியெங்கும் இந்தியப்படைகள் வெறிகொண்டு அலைகின்றன. அன்னையின் கணவர் திரு. கணபதிப்பிள்ளையை ஓர் இந்திய அதிகாரி தனியே அழைத்துச் செல்கின்றான். ஆசை வார்த்தைகள் கூறிப்பார்க்கின்றான். ஆனால், அவரோ எதற்கும் அசையவில்லை. "தியாகம் தேடித்தான் என் மனைவி தன் உயிரைத் தியாகம் செய்ய உறுதி பூண்டிருக்கின்றாள்" என அவர் உறுதியாகக் கூறுகின்றார்.

இந்திய அதிகாரிகளின் முயற்சிகள் எதுவுமே பலனளிக்கவில்லை. அன்னை பூபதியின் இலட்சியப் போராட்டம் முடிவுக்கு வருகிறது. 19. 03. 1988 ஆம் திகதி உண்ணா விரதம் ஆரம்பித்து 31 ஆம் நாள் அன்னை பூபதியின் உயிர் பிரிகிறது. தென் தமிழீழ மக்கள் சோக வெள்ளத்தில் மிதக்கின்றனர். அலை அலையாக மக்கள் மாமாங்க ஆலயத்தை நோக்கி ஓடி வருகின்றனர். இந்தியப் படைகள் வீதிகளை இடைமறித்து மிரட்டுகின்றனர்.

மிரட்டல்களுக்கும், இடைமறிப்புக்களுக்கும் மக்கள் அஞ்சவில்லை. வீட்டு வேலிகளை உடைத்து மக்கள் வெளியேறுகின்றனர். மாமாங்க ஆலயம் மக்கள் வெள்ளமாய் நிறைகின்றது. இந்தியச் சிப்பாய்கள் மிரள்கின்றனர். மக்களின் உணர்வலைகளை அடக்குவதற்கு இந்தியப் படையால் முடியவில்லை.

அன்னையின் புகழுடலைப் பரிசோதிக்க வேண்டும் எனக் கூறி இந்தியச் சிப்பாய்கள் அவரின் உடலை தூக்க முயல்கின்றனர். அன்னையர்கள் ஆவேசம் கொண்டு ஒன்று திரண்டு அன்னையின் புகழுடலைப் பாதுகாக்கின்றனர்.

தொடர்ச்சி 5ம் பக்கம்

எரித்திரியா....

என்ற இடத்தில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட அப்பாவி எரித்திரிய மக்களைப் படுகொலை செய்தன. இப்படுகொலையைத் தொடர்ந்து முதன் முதலாக பெருமளவிலான மக்கள் சூடானுக்குள் அகதிகளாகச் சென்றனர்.

EPLF இன் தோற்றம்

ELF இன் நடவடிக்கைகளால் போராட்டம் பின்தள்ளப்படுவதை உணர்ந்த ELF அமைப்புக்குள் இருந்த தெளிந்த சிந்தனையுள்ள உண்மையான தேசிய விடுதலை நோக்கத்தைக் கொண்டிருந்த புரட்சிவாதிகள் ELF அணியிலிருந்து வெளியேறி 1970ம் ஆண்டளவில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி (ERITREN PEOPLE'S LIBERATION FRONT -EPLF) என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இவ்வமைப்பு சகல மக்களையும், எவ்வித வேறுபாடுமின்றி தேசிய ரீதியில் ஒன்றிணைத்துப் போராட்டத்தில் ஈடுபடுத்தியது. திட்டமிட்ட கட்டுப்பாடான நடவடிக்கைகளால் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தன்னை வளர்த்துக் கொண்டதன் மூலம் இவ்வமைப்பு மக்கள் மத்தியில் தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டது. இதே நேரம் மக்கள் செல்வாக்கை இழந்திருந்த ELF அணியும் ஒரு தனித்த இராணுவக்குழுவாக இயங்கி வந்தது.

வெளிநாட்டு உதவி

எரித்திரியா மக்களுக்குரிய சுதந்திரத்தாயகம் எரித்திரியா தானென்று 1950ம் ஆண்டிலேயே ஐக்கிய நாடுகள் சபையிலே குரல் கொடுத்த சோவியத்யூனியன், எரித்திரியாவில் போராட்ட அணிகள் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து எரித்திரிய கெரில்லாக்களுக்கு பெருமளவில் இராணுவத்தளபாடங்களையும், இராணுவப் பயிற்சிகளையும் வழங்கி வந்தது. மேலும் இரஸ்யச் சார்பாக கியூபாவும் எரித்திரிய கெரில்லாக்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கியது. எதியோப்பிய ஆட்சி அமெரிக்காவிற்கு சார்பாக இருந்தபடியால் அப்பிரதேசத்தில் எரித்திரியா மூலம் தனது செல்வாக்கை நிலைநாட்ட ரஸ்யா முயன்றது.

எதியோப்பிய ஆட்சி மாற்றம்

இதே நேரம் 1974ம் ஆண்டு எதியோப்பியாவில் பஞ்சம், பட்டினி தலைவிரித்தாடத் தொடங்கியதையடுத்து அமெரிக்காவின் கைப்பொம்மையான மன்னர் செலாசியினாட்சி உயர்மட்ட இராணுவப் புரட்சியின் மூலம் கவிழ்க்கப்பட்டு மார்க்சிச சிந்தனையாளராகிய 'மென்கெஸ்ட்ரோ' ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார் இதைத் தொடர்ந்து எதியோப்பியாவில் பல மாற்றங்கள் உண்டாகின. வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன. நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. அமெரிக்க முகவர்கள் (AGENTS) எதியோப்பியாவிலிருந்து படிப்படியாக வெளியேற்றப்பட்டனர். சோசலிசப் பாதைக்கான மாற்றங்கள் ஏற்பட்டன. எனினும் எதியோப்பிய புதிய அதிபர் எரித்திரிய மக்களின் சுயநிர்ணய உரிமையையோ, தேசிய விடுதலைப் போராட்டத்தையோ அங்கீகரிக்கவில்லை. இவரும் எரித்திரிய கெரில்லாக்களை அடக்குவதையே கொள்கையாகக் கொண்டிருந்தார். இக்கால கட்டத்தில் எரித்திரிய கெரில்லாக்களுக்கு ஆயுத உதவி வழங்கிவந்த சோவியத் யூனியன் எதியோப்பியாவில் தனக்குச் சார்பான அரசு பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து ஒரு இக்கட்டான சூழ்நிலையை எதிர் நோக்கவேண்டி வந்தது. எதியோப்பியாவை ஆதரிப்பதா, அல்லது எரித்திரிய கெரில்லாக்களை ஆதரிப்பதா, என்ற ஒரு சங்கடமான நிலை உருவானது.

எல்லை யுத்தம்

இச் சந்தர்ப்பத்தில், சோமாலியா, எதியோப்பியா இரண்டையும் பிரிக்கும் எல்லைப்பிரதேசத்தில் எதியோப்பியாவின் பகுதியிலமைந்திருந்த 'ஒகடா' (OGADAH) பாலைவனப்பிரதேசத்திற்காக இருநாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு தமது இராணுவ பலத்தை அதிகரித்தன. 1960ம் ஆண்டு சுதந்திரம் பெற்ற சோமாலியா இருந்து ஆரம்பத்தில் அமெரிக்க சார்பு நாடாக இருந்தது. இது எதியோப்பியாவுடனான சண்டையில் ஈடுபடுவதற்காக 20,000 பேர் கொண்ட இராணுவ அமைப்பொன்றை உருவாக்கித் தருமாறு அமெரிக்காவிடம் வேண்டியது. எதியோப்பியாவில் அமெரிக்கக் கைப்பொம்மை ஆட்சி கவிழ்க்கப்பட்டிருந்தமையாலும், எதியோப்பிய தலைமைப்பீடம் ரஸ்சியா சார்பாக மாறிக்கொண்டிருந்ததாலும் அமெரிக்கா சோமாலியாவுக்கு உதவி புரிய முன்வந்தது. எனினும் எதியோப்பியாவை முற்றாக முறித்துக்கொள்ள விரும்பாத அமெரிக்க நிர்வாகம் 5,000 பேரை மட்டும் கொண்ட ஓர் இராணுவத்தை சோமாலியாவிற்கு அமைத்துக்கொடுத்தது. இந் நடவடிக்கையால் ஆத்திரமுற்ற எதியோப்பிய தலைமைப்பீடம், எதியோப்பியாவிலிருந்த அமெரிக்க தளங்களை அகற்றியதோடு ரஸ்சியாவின் உதவியைக் கோரியது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட ரஸ்சியா உடனடியாக எதியோப்பியாவிற்கு நூறு கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் அனுப்பியது. இதைத்தொடர்ந்து எதியோப்பியாவிற்கும் சோமாலியாவிற்குமிடையே போர்மூண்டது. இப்போர் சோவியத், அமெரிக்க வல்லரசுகளுக்கிடையேயான ஒரு "குட்டியுத்தம்" என்று வர்ணிக்கப்பட்டது.

எரித்திரிய மக்களின் வெற்றி

கொள்கை முதல் பல்வேறு நடவடிக்கைகளிலும் தம்மிடையே வேறுபாடுகளைக் கொண்டிருந்த E.P.L.F அணியும், E.L.F. அணியும் தேசிய விடுதலைப் போருக்காக தம்மிடையே சில ஒப்பந்தங்களை உண்டாக்கிப் போரிட்டு வந்தன. இவ்வணிகள் 1976-77 காலகட்டப் பகுதியில் சோமாலியாவிற்கும், எதியோப்பியாவிற்குமிடையே நடந்த சண்டையை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டன. எரித்திரியப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த எதியோப்பியப் படைகள்மீது பலத்த தாக்குதல்களை இவ்வ

ணிகள் மேற்கொண்டன. சோமாலியாவுடன் தீவிரமான போரில் ஈடுபட்டிருந்த எதியோப்பியா, எரித்திரியாவுடனான போரை [illegible] வில்லை. எரித்திரிய தலைநக[illegible] [illegible] விடுவித்துக்கொண்ட EPLF, ELF அணியினர் 1977ம் ஆண்டின் இறுதியில் எரித்திரியா முழுவதையும் தமதாக்கிக் கொண்டனர். இவர்களின் இந்நடவடிக்கைக்கு எகிப்து, ஈராக், சூடான் ஆகிய நாடுகளும் உதவியமை குறிப்பிடத்தக்கது.

எதியோப்பியாவின் பெரும் படையெடுப்பு

சோமாலிய - எதியோப்பிய போரில் சோமாலியா தோற்கடிக்கப்பட்டு, ஒகடா பாலைவனப்பிரதேசம், எதியோப்பிய வசமாகியது. இதனையடுத்து சோமாலிய -எதியோப்பிய போர்முடிவிற்கு வந்ததும், எதியோப்பியாவின் கவனம் எரித்திரியா மீது திரும்பியது. எதியோப்பியா பெருமளவு இராணுவத்தை திரட்டிக்கொண்டு எரித்திரியா மீது தாக்குதலை மேற்கொள்ளத் தயாரானது. இதுவரை காலமும் எரித்திரிய மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஆதரித்துவந்த சோவியத் யூனியன் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. எதியோப்பிய மார்க்சிய அரசுடன் எரித்திரியா ஒரு சமஸ்டி அமைப்பாக இணைய வேண்டுமென்பதே ரஸ்யாவின் புதிய நிலைப்பாடாயிற்று. இதனால் எரித்திரிய போராளிகளுக்கான உதவியை நிறுத்தியதுடன், எதியோப்பியா எரித்திரியா மீது மேற்கொண்ட போரிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. 1978ம் ஆண்டு யூலை மாதம், எதியோப்பியாவின் ஒரு இலட்சம் துருப்புக்களும், நான்காயிரம் கியூப துருப்புக்களும், இருநூற்று ஐம்பது ரஸ்ய இராணுவ நிபுணர்களும் கொண்ட அணி எரித்திரியாவைத் தாக்கியது. தமக்கு ஆதரவளித்த சோவியத் யூனியனே தமக்கு எதிரான போரிலீடுபட்டதால், கலங்கிப்போன எரித்திரியக் கெரில்லாக்கள் எரித்திரியாவை விட்டு சூடானுக்குப் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தாக்குதலின்போது பெருமளவு எரித்திரியக் கெரில்லாக்களும், ஏராளமான பொதுமக்களும் கொல்லப்பட்டனர். மூன்றரை இலட்சத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாக சூடானுக்குள் செல்லவேண்டிய ஏற்பட்டது. சில மலைப்பிரதேசங்களைத்தவிர எரித்திரியா மீண்டும் எதியோப்பியாவின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

மீண்டும் போராட்டம்

எரித்திரியாவிலிருந்து பின்வாங்கிய EPLF இயக்கத்தினர், சூடானில் கரையோரப்பிரதேசங்களில் தமது தளங்களையமைத்து போராட்டத்தைத் தொடர்ந்தனர். சூடானில் தளமமைத்துப் போராடும் EPLF கெரில்லாக்களை சமாளிக்கமுடியாமல் திணறிய எதியோப்பியா 1980இல் சூடானுடன் ஓர் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டதன் மூலம், சூடான் கரையோரப் பிரதேசங்களிலிருந்த EPLF கெரில்லாத் தளங்களை அகற்றியது. மேலும் 1979, 82 காலப்பகுதியில் எரித்திரியக் கெரில்லாக்களை முற்றாக அழிக்கும் நோக்குடன் 5 மிகப்பெரிய தாக்குதல்கள் எதியோப்பியாவால் நடத்தப்பட்டன. இந் நடவடிக்கைகள் எரித்திரிய கெரில்லாக்களை மிகவும் பாதிப்படையச் செய்தன.

பஞ்சமும் தேக்க நிலையும்

சோவியத்யூனியனின் புதிய நிலைப்பாடும் எரித்திரியக் கெரில்லாக்களின் இராணுவத் தோல்விகளும் EPLF, ELF இயக்கங்களுக்கிடையே முரண்பாடுகளை தோற்றுவித்தது. ELF அமைப்பு ரஸ்ய ஆலோசனைப்படி நடக்க முடிவுசெய்து ரஸ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் ஈடுபட்டது. ஆனால் EPLF அணியோ பேச்சுவார்த்தையை நிராகரித்தது. இச்சிக்கல் தொடர்பாக 1980ல் EPLF, ELF அணிகளுக்கிடையே ஓர் உள்நாட்டுச் சண்டையே உருவானது. இக்கால கட்டத்தில் EPLF அணியில் 30,000 அங்கத்தவர்களும், ELF அணியில் 5000 அங்கத்தவர்களும் இருந்தனர். எனினும் 1981ல் இவ்விரு அணிகளும் மீண்டும் இணைந்துகொண்டன. இக்காலகட்டத்தில் எரித்திரியா, சூடான் பகுதிகளில் பஞ்சம் ஏற்பட்டது. இதன்போது எரித்திரிய மக்களுக்கு பல வெளிநாடுகள் உதவ முன்வந்த போதிலும் எதியோப்பியாவால் அவை தடுத்து நிறுத்தப்பட்டன. 1983ல் EPLF அணி மீண்டும் தனது இராணுவப்பணிகளை ஆரம்பித்தது. விரைவில் எரித்திரியாவின் மேற்கும் பகுதிகளையும், எரித்திரியாவின் செங்கடலின் கரையோரப் பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த இந்த அணி 1984ல் ஏற்பட்ட பஞ்சத்தால் போராட்டத்தில் தேக்க நிலையை சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

[illegible]

எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியினர் தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களில் விவசாய, கைத்தொழில் துறைகளை அபிவிருத்தி செய்வதில் முழுமூச்சாக ஈடுபட்டிருப்பதுடன், மக்களின் அடிப்படைத் தேவைகளையும் கவனித்து வருகின்றனர். சுகாதாரம், கல்வி வசதி என்பனவும் இவர்களால் ஒழுங்கான முறையில் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் EPLF அணியினர் கெரில்லா நடவடிக்கை மூலம் எதியோப்பிய அரசிற்கு பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியிருப்பதுடன், எதியோப்பிய பொருளாதாரத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றனர். அடிமைகளாக வாழ விரும்பாது ஒரு தேசிய இனமாக சுதந்திரமாக வாழ்வதற்காக 25 வருடங்களுக்கு மேலாக விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டுவருக்கும் எரித்திரிய மக்கள் நிச்சயம் ஒரு நாள் தமது இலக்கை அடைந்தே தீருவார்கள். ■

அந்நியனின் அதர்மத்தை....

இடையில் சிங்கள சிறிலங்காப் படையினரும் பூபதி அம்மாவின் புகழுடலைக் கைப்பற்றக் கங்கணம் கட்டி நிற்கின்றனர். இந்தியப்படையும், சிறிலங்காப்படையும் அன்னையின் இலட்சிய உடலுக்காகப் போட்டி போடுகின்றனர். இந்த இழுபறி நிலையைப் பயன்படுத்தி அன்னையர்கள் பூபதி அம்மாவின் புகழுடலைத் தூக்கிச் சென்று மறைவிடம் ஒன்றில் ஒளித்து வைத்துக் கொள்கின்றனர்.

தடைகளையும் மீறி இறுதி ஊர்வலம்

அன்னையின் புகழுடலை எழுச்சிகரமான ஊர்வலத்தோடு நல்லடக்கம் செய்யவேண்டுமென மக்கள் திட்டமிடுகின்றனர். இந்தியப் படைகள் வீதிக்கு வீதி காவல் நிற்கிறது. அன்னையர் மலர் மாலைகள் மறைத்துக் கொண்டு, இந்தியப்படைகளின் கண்களில் படாதவாறு ஒச்சொழுங்கைகள் வழியாகச் சென்று அன்னையின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

இது இவ்வாறிருக்க கைது செய்யப்பட்டு முகாமில் சிறை வைக்கப்பட்டிருந்த முக்கியஸ்தர்களும் பூபதி அம்மாவின் பிள்ளைகளும் விடுவிக்கப்படுகின்றனர்.

அன்னையின் புகழுடல் அலங்காரத்தோடு ஊர்வலமாக கொண்டு செல்லப்படவேண்டும். அதற்கேற்ப இரகசிய வேலைத் திட்டங்கள் நடைபெறுகின்றன. அலங்காரசோடனைப் பொருள்கள் ஆயத்த நிலையில் வைக்கப்படுகின்றன. சட்டத்தரணி பொன் வேணுதாஸ், பத்திரிகை ஆசிரியர் நித்தியானந்தம் ஆகியோர் ஊர்வல ஒழுங்குகளை கவனிக்கின்றனர். இரவோடு இரவாக வீதிகள் அலங்கரிக்கப்படுகின்றன.

அன்னையின் உயிர்பிரிந்து மூன்றாம் நாள் வெள்ளை நிற ஆடை அணிந்த அன்னையர்களின் அணிவகுப்பில் மக்கள் திரளுக்கு மத்தியில் அன்னை பூபதியின் புகழுடல் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக வந்து கொண்டிருக்கிறது.

வீதிகளில் காவல் நின்ற இந்தியச் சிப்பாய்கள் அன்னை பூபதியின் புகழுடலுக்கு சிரம் தாழ்த்தி வணங்கி நின்றனர். ஊர்வலம் கல்லடிப்பாலத்தைக் கடந்து செல்வதைக் கண்ட மக்கள் ஓடோடி வந்து அணியில் சேர்ந்து கொள்கின்றனர். நாவலடி கடற்கரையை நோக்கி நீண்ட மக்கள் பேரணியோடு அன்னையின் புகழுடல் சென்று கொண்டிருக்கிறது.

அன்னை பூபதியின் உயிரற்ற உடலைக் கூட இந்திய ஆக்கிரமிப்புப்படை நெருங்க முடியாமல் போயிற்று. தமிழ்மக்களின் எழுச்சியினையும், விடுதலை வேட்கையினையும் அடக்கு முறையால் அடக்கி விட முடியாது என்பதனை அன்னை பூபதியின் இறுதி ஊர்வலம் எடுத்துக்காட்டியது.

ஒரு தாயின் ஒப்பற்ற தியாகமாக தமிழீழப் பெண் இனத்தின் எழுச்சி வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் முடிவுற்றது. அன்னையின் துணிவும், உறுதியும், அற்புதமான தற்கொடையும் இந்திய வல்லாதிக்கத்தைத் தலைகுனிய வைத்தது. ■

புலிவீரன்

மனம் தளரான்
கண் வளரான்
காவலிருப்பான்
மது குடியான்
புகை பிடியான்
சரணடையான்
குண்டணைப்பான்
குப்பி கடிப்பான்
பகை கொன்றொழிப்பான்
மக்கள் மகிழ்வு
கண்டு களிப்பான்
புலிவீரன்

றோ நடத்திய யுத்தம்!

ஓர் அரசன் தனக்கு அயலில் உள்ள பலவானான எதிரியை விட, பலமானான மற்றொரு அரசனோடு கூட்டு வைத்துக் கொள்ளலாம். அப்படியொரு பலமான அரசன் இல்லையென்றால் அயலவனான எதிரியுடன் ஒத்துப்போக வேண்டும். நிதி வழங்கல் மூலமோ படைவழங்கல் மூலமோ அல்லது தனது நிலத்தின் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதன் மூலமோ மேற்படி அயலவனை தவிர்த்துவிடல் வேண்டும். பலவானான ஒரு எதிரியால் தாக்கப்படக்கூடிய இடத்து அவனோடு உறவு வைத்திருப்பது என்பது, தாக்கப்டுவதைவிட தீங்கானது அல்ல.

இது ஒற்றர்களின் காலம்.

ஒற்றர்களின் செல்லும்தூரம் கூடியது. கொல்லுந்திறனும் கூடியது. ஆனால் மிக ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை, மாறாத அதே முதன்மை நிலையிலிருப்பவை உளவு நிறுவனங்கள் மட்டும் தான்.

கடந்த தசாப்தத்தில் முடிவுக்குவந்த கெடுபிடி யுத்தம்கூட, ஒரு விதத்தில் இரண்டு உளவு நிறுவனங்கள்ற்கிடையில் (சி.ஐ.ஏ-கே.ஜி.பி) நடந்த யுத்தம் தான்.

இன்று, வலிமையான உளவு நிறுவனத்தை வைத்திருக்கும் நாடு எளிதில் வெல்லப்பட முடியாத நாடாயிக்கிறது.

இந்த வகையில், தென்னாசியாவில் அதிகம் சர்ச்சைக்கும், பிரபல்யத்திற்கும் உள்ளாகிய ஓர் உளவு நிறுவனம் 'றோ'. இந்தியப் பேரசின் நிழல் அரசுதான் றோ. இந்தியாவிற்கு உளவு நிறுவனம் குறித்து -ஒற்றர்படை குறித்து நீண்ட பாரம்பரியமும், தொடர்ச்சியான அனுபவங்களும், தேர்ச்சியும் உண்டு. முதல் இந்தியப் பேரரசான மகதப் பேரரசை, அசோகன் அமைப்பதற்கேதுவான முன்னோடிச் சிந்தனைகளில் முக்கியமானது, கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரம் என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள். அர்த்த சாஸ்திரம் கூறும் அரசு ஒரு விதத்தில், ஒற்றர்களின் அரசுதான். அர்த்த சாஸ்திரத்தில் இருந்து 'றோ' வரையிலுமான நீண்ட தொடர்ச்சியறாத கூர்ப்பின் பின்னணியில் வைத்தே, இந்தியப் புலனாய்வுத் துறையின் வளர்ச்சியை, வலிமையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியப் பேரரசு, தன் அயலவர்களின் சுதந்திரத்தை தனது பாதுகாப்பை விடவும் மேலானதாக என்றுமே கருதியதில்லை. இந்த வகையில், இந்துமா கடலில் இந்தியப் பேரரசின் கீழே யிருப்பதான 'துர்ப்பாக்கிய' அமைவிடம் காரணமாக இலங்கைத் தீவு எப்பொழுதுமே சுதந்திரமாக இருந்ததுயில்லை.

றோ, பாகிஸ்தானைத் துண்டாடி பங்களாதேசை உருவாக்கியது. இன்றும், பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள தீவிரவாதிகளுக்கு றோ உதவி வருகிறது. பங்களாதேசில் 'சாந்திபாகினி' கொரில்லாக்களுக்கு றோ இன்றும் உதவுகிறது. சிக்கிம் மன்னர் ஓர் அமெரிக்கப் பெண்ணை திருமணம் செய்து கொண்டதும், சி.ஐ.ஏ. மன்னரின் ஊடாக சிக்கிமில் ஊடுருவுகிறது என்று பயந்த இந்திரா காந்தி, சிக்கிமின் ஸ்திரத்தன்மையை குழப்பும்படி றோவிற்கு கட்டளையிட்டார். நேபாளத்தில் இந்தியாவிற்கு அடங்காத மன்னரை, றோ மன்னரின் எதிரிகளை வளர்த்ததின் மூலம் இறுதியாக அடக்கியது.

இப்படியாக இந்தியப் பேரரசின் வல்லரசு வியூகத்தை றோதான் வடிவமைத்து செயற்படுத்தியது.

ஆனால் எல்லாக்களங்களிலும் வெற்றியும், புகழும் ஈட்டிய றோவின் வியூகங்கள் இலங்கைத்தீவில் தோல்வியில் முடிவடைந்தன. ஐ.பி.கே.எவ். தளபதி கல்கட் போன்ற அவர்களின் சொந்த தளபதிகளே தோல்விகளுக்காக றோவை குறை கூறும் நிலை இங்கு உண்டாகியது.

இவ்விதம் றோ, தோற்ற படலத்தை அதன் ஆரம்பத்தில் இருந்து கூற முற்படுகிறது றோகான் குணரட்ணா எழுதிய 'சிறிலங்காவில் இந்தியத் தலையீடு' (Indian intevention in Srilanka) என்ற நூல். இவ்வாண்டின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட இந்நூலின் விலை 595 ரூபாய் (இலங்கை), பக்கங்கள் : 499.

றோகான் குணரட்ணா கூறுகிறார்: 1968ல் இந்திரா காந்தியின் ஆலோசனைப்படி ஆர்.என். காவ் (R.N. KAO) றோவை ஸ்தாபித்தார். இந்திரா காந்தி கொல்லப்படும்வரை காவ் அவருடைய தேசிய பாதுகாப்பு அலோசகராக இருந்தார்.

இந்திரா காந்தியின் காலத்தில் இருந்தே இந்திய வெளியுறவுக் கொள்கையை றோதான் வடிவமைத்தது. அதைப் பின்னர் வெளியுறவு அமைச்சு நடைமுறைப்படுத்தியது. இந்திய வெளியுறவு கொள்கையை வகுப்பதில் பல்வேறு அமைச்சுகளும் நிறுவனங்களும் சம்பந்தப்பட்டன. எனினும் றோதான் 'Real player' ஆக இருந்தது.

பங்களாதேஷ் பிரிக்கப்பட்ட பின்னர், அதன் பிரதமர் ஜியா உர் ரகுமான் புதுடில்லி வந்திருந்தார். அங்கு இந்திராகாந்தியைச் சந்தித்த அவர், அச்சந்தர்ப்பத்தில் அங்கு காணப்பட்ட காவ் ஐ சுட்டிக்காட்டி கூறினார்: எனது நாட்டைப் பற்றி நான் அறிந்து வைத்திருப்பதை விட இந்த மனிதர் அதிகம் அறிந்து வைத்திருக்கிறார் என்று.

பங்களாதேசில் இந்தியா எதைச் செய்ததோ, அதைத்தான் சிறிது மாற்றங்களுடன் சிறிலங்காவிலும் செய்ய முற்பட்டது என்று குணரட்ணா கூறுகிறார். பங்களாதேசில் இந்தியத் தலையீடு இரண்டு கட்டங்களையுடையது. முதற்கட்டம் றோவிற்குரியது. இதற்கு பொறுப்பு காவ். றோ பாகிஸ்தானுக்கு எதிரான வங்காளிப் போராளிகளை ஊக்குவித்து, உதவியது. இதன் மூலம் ஆத்திரமூட்டப்பட்ட பாகிஸ்தான் இந்தியா மீது போர்ப்பிரகடனம் செய்தது. இதை றோ முன்கூட்டியே எதிர்பார்த்தது. இரண்டாம் கட்டம் படையெடுப்பு. இதற்குப் பொறுப்பு ஜெனரல் மனெக்சோ. பாகிஸ்தானின் போர்ப்பிரகடனத்தை எதிர்பார்த்திருந்த இந்தியப் படைகள், கிழக்குப் பாகிஸ்தானை -பங்களாதேசை ஆக்கிரமித்தன. பன்னிரெண்டு நாட்கள் யுத்தத்தின்பின் டாக்கா இந்தியர்களிடம் வீழ்ச்சியடைந்தது.

இந்த இரண்டு கட்டங்களின் போதும் காவ், மனெக்சோ இருவரும் இந்திராகாந்தியிடமிருந்து நேரடியாக உத்தரவுகளைப் பெற்றார்கள். அவர்கள் இந்திராகாந்திக்கு மட்டுந்தான் பதில் சொல்ல வேண்டியிருந்தது.

சிறீலங்காவில், பங்களாதேசைப் போலவே முதலாம் கட்டம் அமைந்தது. இங்கு முகங்கள் மட்டும் மாறின. இந்திராகாந்தி கொல்லப்படும்வரை தமிழ் இயக்கங்களிற்கு பயிற்சியும் பிற வசதிகளும் தரும் நடவடிக்கைகளை காவ் கவனித்து வந்தார். அதன் பின்னர், கிரிஸ் சந்திர சக்சேனா, வெர்மா, ஜோஷி போன்ற றோவின் முக்கிய இயக்குனர்கள் சகலரும் ஈழப்போரில் சம்பந்தப்பட்டார்கள். இங்கு முகங்கள் மட்டும் மாறின. இந்திரா காந்தி கொல்லப்படும்வரை தமிழ் இயக்கங்களுக்குப் பயிற்சியும் பிற வசதிகளையும் அளிக்கும் நடவடிக்கைகளை காவ் கவனித்து வந்தார். அதன்பின் கிரிஸ்சந்திர சக்சேனா, வெர்மா, ஜோஷி போன்ற றோவின் முக்கிய இயக்குனர்கள் சகலரும் ஈழப்போரில் சம்பந்தப்பட்டார்கள்.

இரண்டாம் கட்டம் சிறீலங்காவில் சிறிது வித்தியாசப்பட்டது. பங்களாதேசில், இந்தியப் படைகள் ஆக்கிரமித்தன. சிறீலங்காவில் இந்தியப்படைகள் அழைக்கப்பட்டன. ஜே.ஆர். இந்தியப்படைகளை ஐ.பி.கே.எவ். என்ற பெயரில் இங்கு அழைத்தார். ஆனால் பங்களாதேசைப் போலல்லாது சிறீலங்காவில் றோவின் வியூகங்கள் தோல்விகளும் அழிவுகளுமாய் முடிந்தன.

றோகான் குணரட்ண, றோ அதிகாரிகளை "செய்திகளைத் திரிக்கும் நிபுணர்கள்" (Dis Information Specialist) என்று அழைக்கிறார்.

இந்திய பயிற்சிக் களத்தில் லெப். கேணல் பொன்னம்மானுடன் சக புலி வீரர்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளால் சிறைப் பிடிக்கப்பட்ட இந்திய இராணுவத்தினரில் ஒரு பகுதியினர்

கைதிகள் பரிமாற்றத்தின்போது இந்திய இராணுவ அதிகாரிகளுடன் புலிகள்

எல்லா இடங்களிலும் எப்பொழுதும் எம்மை உற்றுக்கவனிப்பவை ஒற்றர்களின் விழிகள்.
எல்லா இடங்களிலும் எப்போதும் எம்மை உற்றுக் கேட்பவை ஒற்றர்களின் செவிகள்.
இன்று யாழ்ப்பாணத்தில் மக்கள் கூடும் இடங்களில் ஒற்றர்களைப் பற்றிய எச்சரிக்கைகளை காண முடிகிறது.

நவீன அரசியலில், ஒரு அரசின் மிகத்துடிப்பான விழிப்பான பாகம் ஒற்றர்கள் படைதான். மிக ஆதியான காலமிருந்தே அரசுகளின் உருவாக்கத்தோடு ஒற்றர்படையின் வளர்ச்சியும் சேர்ந்தே அடையாளம் காணப்படுகின்றது. கிறிஸ்துவிற்கு முன் நாலாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய அர்த்த சாஸ்திரம், ஒற்றர்களைப்பற்றி வகைபிரித்தும், வற்புறுத்தியும் கூறுகிறது.

நவீன அரசியலில் ஒற்றர்படை அல்லது உளவு நிறுவனம் எனப்படுவது தவிர்க்க முடியாத நிழல் அரசுதான்.

நவீன வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதோ ஒன்று, நாடுகளின் பலத்தை தீர்மானிப்பதாக இருந்தது. ஒருகாலத்தில் பலமான கடற்படையை வைத்திருந்த நாடு, பிற நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தியது. பின்பு கொலனிகளை வைத்திருந்த அரசு, பேரரசு ஆகியது. பின்னர் விமானப்படை வந்தது. அதற்கடுத்தாக ஏவுகணைகள். இன்று அணுவாயுதங்கள்.

நவீன அரசியலில் கோட்பாடுகள் மாறின. மூலோபாயங்கள் மாறின. ஆயுதங்கள் மாறின. தொழில்நுட்ப வளர்ச்சியோடு சேர்ந்து படிப்படியாக ஆயுதங்க

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

தமிழீழ விடுதலைப் புலிகளின் 10வது பயிற்சி முகாமின் (தமிழகத்தில்) பயிற்சியாளர்களிடையே சோமேஸ்தான் கதாநாயகன். அவனைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் காணப்படும். பயிற்சி முகாமுக்கு புதிதாக வரும் உறுப்பினர்கள் என்றாலும் சரி பயிற்சி பெற்ற மூத்த உறுப்பினர்கள் என்றாலும் சரி, அல்லது பயிற்சி முகாமைப் பார்வையிட வந்த வெளியாளர்கள் என்றாலும் சரி, ஒவ்வொருவருக்கும் ஏற்றமாதிரிக் கதைத்து இவன் முழுத் தகவல்களையும் திரட்டிவிடுவான். அதேவேளை அங்குள்ள நடைமுறைகள் பற்றியும் அவர்களுக்கு விளக்கமளித்துவிடுவான். அங்கு வருபவர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் இவன்தான் தொடர்புப் பாலமாக விளங்குவான். ஏனெனில் பயிற்சி எடுக்கும்போது பயிற்சியாளர்கள் தேவையற்ற விதத்தில் எவருடனும் கதைக்க இயலாது. இதைவிட ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திலிருந்து வந்திருப்பவர்கள்,

லெப். சோமேஸ்

ஒருவரை ஒருவர் அறிமுகமில்லாதிருப்பார்கள். ஆதலால் கதைக்கத் தயங்குவார்கள். ஆனால், சோமேசைப் பொறுத்தவரை அதெல்லாம் கிடையாது. பழகும் விதத்தினால் அவன் எல்லோருக்கும் பிடித்தவனாகிவிடுவான். அதனால் அவன் கேட்கும் கேள்விகளுக்கு அவர்களால் பதில் சொல்லாமலிருக்க முடியாது.

சாப்பாட்டு நேரத்தில் இவனிடம்தான் மற்றைய பயிற்சியாளர்கள் விளக்கம் கேட்பார்கள். அவர்களுக்கு விளங்காதவற்றையும் மேலதிக விபரத்தையும் இவன்தான் விபரமாகப் புரியவைப்பான். அனைவரும் கூட்டமாக அமர்ந்திருக்க நடுநாயகமாக சோமேஸ் உட்கார்ந்திருப்பான். பகிடி விட்டபடி சுற்றிவர எல்லோரையும் அவதானித்துக்கொண்டே சாப்பாட்டைக் குழைப்பான். பின் கதைத்துக் கதைத்து குழைத்த சாப்பாட்டைக் கொடுப்பான். அதே முகாமில் சமைத்த சாப்பாடுதான் - தனியாக இருந்து இதைச் சாப்பிடும்போது இது பயிற்சிக் காலச் சாப்பாடு என்ற உணர்விருக்கும். ஆனால் சோமேஸ் கொடுக்கும்போது மட்டும் அது அமிர்தமாக இருக்கும். வீட்டில் சகோதரர்களுடன் கூட இருந்து அம்மா குழைத்துக் கொடுக்கச் சாப்பிடுவது போலிருக்கும். புதிதாக வருபவர்கள் கூச்சத்தினால் சாப்பிட மறுத்தால் இவன் "நீ சாப்பிடாட்டி நானும் சாப்பிட மாட்டேன்" என்று அடம்பிடித்து சாப்பிட வைப்பான். அடுத்த நாள் அவர்கள் தாங்களாகவே சோமேஸ் முன் ஆஜராகிவிடுவார்கள்.

பயிற்சியின்போது களைத்துப் போய் மைதானத்தை விட்டு வருபவர்களுக்கெல்லாம் சோமேசைக் கண்டவுடன் அக்களைப்பு பறந்துபோய்விடும். இவனது பகிடிகளையும், கதைகளையும் கேட்க புது உற்சாகம் பிறந்துவிடும். பயிற்சி முடிந்ததும் அந்த முகாமின் முதல் பொறுப்பாளர்கள் முதல் அனைவரிடமும் ஒரே கேள்வியைத்தான் கேட்டார்கள் பயிற்சியாளர்கள். "சோமேஸ் எங்கை போறான்" எல்லோருக்கும் தாங்கள் போகுமிடத்துக்கே சோமேசும் வரவேண்டும் என்று ஒரு ஆசை. அவனிருந்தால் தான் எப்போதும் தாங்கள் உற்சாகமாக இருக்க முடியும் என்று நம்பினார்கள்.

ஒவ்வொரு பணிகள் கருதி முகாமிலிருந்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படும் போராளிகளை கைகளால் கட்டிப்பிடித்து கண்கள் கலங்க அனுப்பிய இவன், தானும் அவ்வாறு பிரிந்து சென்றான். அந்தக் காட்சிகள் அவனுடன் பழகிய எவராலும் மறக்க முடியாதவை.

எல்லோரிடமும் பழகும்விதம், விளக்கமளிக்கும் ஆற்றல் இவற்றைக் கருத்திற் கொண்டு, இவன் கோயம்புத்தூர் பகுதியில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பணிகளை மேற்கொள்வதற்கென தெரிவு செய்யப்பட்டான்.

மாணவர் இயக்கப் பணிகளை இவன் சிறப்பாக மேற்கொண்டான். அக்காலத்தில் இவனுடன் பழகிய கோயம்புத்தூர் மக்கள் என்றும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாளர்களாகவே விளங்குவர். எந்தத் தடைகளும் அவர்களின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஏனெனில், ஒரு போராளி எத்தகைய உயர்ந்த குணத்தைக் கொண்டிருப்பான்; இந்தப் போராட்டம் எத்தனை உயரிய தியாகங்களினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதையெல்லாம் சோமேசுடன் பழகியும், அவன் சொல்லக் கேட்டும் உணர்ந்திருக்கிறார்கள் அவர்கள்.

எதைத்தான் செய்தாலும் இவனுக்குத் தன் சொந்த மண்ணிலிருந்து போராட வேண்டும் என்பதுதான் ஆசை. தாயகத்தைப் பற்றி வரும் செய்திகள், தொடர்ந்து அங்கேயிருக்க முடியாத மனநிலையைத் தோற்றுவித்தன. அதனால் "நாட்டுக்குப் போக வேண்டும்" என்று வற்புறுத்திக் கொண்டேயிருந்தான். மாணவர் இயக்கப் பணிகளைச் செய்வதற்கு இவன்தான் பொருத்தமான ஆள். ஆனாலும் இவனது நச்சரிப்புத் தாங்காமல் தமிழீழத்திற்கு அனுப்பும் பொருட்டு தமிழகக் கரையில் இருந்த முகாமிற்கு அனுப்பப்பட்டான். அங்கு சில காலம் பணியாற்றிய பின்னரே இவனுக்கு, தாயக மண்ணை மிதிக்கும் பாக்கியம் கிடைத்தது.

அந்தக்காலத்தில் சிறிலங்காப் படை இவனது சொந்தக்கிராமமான பலாலிப்பகுதி முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது. கள்ளக்குடியேற்றக் காரரை தடுக்கவென்று அமைக்கப்பட்ட இராணுவ முகாமினால் அந்த மண்ணின் பூர்வீகக் குடிமக்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இவன் இப்பகுதியைச் சேர்ந்தவனென்பதாலும், அப்பகுதியை நன்கு அறிந்தவனென்பதாலும் அப்பகுதியை வேவு பார்க்கும் குழுவில் இணைக்கப்பட்டான், தான் மழலையாய் நடைபயின்ற மண்ணில், உருண்டு புரண்டு விளையாடிய மண்ணில் இன்று ஒளித்து ஒளித்து போய் வேவு பார்க்கும் நிலை வந்துவிட்டதே என்று எண்ணி வருந்தினான். ஆனாலும் வரலாறு தனக்கு இட்டபணியைச் செய்யும் மனத்திருப்தி அவனுக்கு இருந்தது.

கட்டுவன் காவலரணில் இவன் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், 21-05-87 அன்று சிறிலங்காப்படையினருடனான மோதலில் காயமடைந்தான். காலில் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் இருந்த பொழுது, இவனது அன்னை இவனைப் பார்க்கவந்தார். தான் முத்தமிட்டு வளர்த்த அந்தக்கால்கள் கட்டிலில் காயத்துடன் ஓய்வெடுப்பதைக் கண்டதும் துக்கம் தாளவில்லை. அதனால் "தம்பி, நீ இவ்வளவு காலமும் இயக்கத்திற்கு வேலைசெய்தது போதும்: இனி வீட்டைவா. உனக்கு ஏழு பொம்பிளைச் சகோதரங்கள் இருக்கெல்லே அதுகளுக்கு உழைக்கவேணும்தானை வீட்டை வா" என்று கேட்டார். அவ்வளவு தான் இவன் சீறியெழுந்தான்;

தான் இருக்குமிடம் வைத்தியசாலை என்பதையும் மறந்தான்; "எல்லாத் தாய்மாரும் சண்டைக்குப் போ எண்டு பிள்ளையள அனுப்புற நேரத்தில நீ வீட்டை வாச் சொல்லியோ கேக்கிறாய். நீயும் ஒரு தாயே? எங்கட இடமெல்லாம் ஆமிக்காரன் பிடிச்சு வைச்சிருக்கிறான். இந்த நேரத்தில வீட்டை வாச் சொல்லிக் கேட்கிறாய். இஞ்சையிருந்து போ. இனிமேல் இதைப்பற்றிக் கதைச்சா, நான் வீட்டையே வரமாட்டன்" என்று கத்தினான். வேதனையுடன் தாய் அங்கிருந்து நகர்ந்தார்.

பெற்றதாயை இவன் அப்படி பேசியதற்கு சில காரணங்கள் இருந்தன. முதலாவது, இவன் காயப்படுவதற்கு முதல் நாள்தான் யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த ராதா சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவை எய்தியிருந்தார். அதுவும் இவன் காயப்பட்ட அதே கட்டுவன் பகுதியில், ஒரு தாயைப் போன்ற கவனிப்புடன் அவனை நேசித்த ராதாவை இழந்த ஆத்திரம் அவனுள் குமுறிக் கொண்டிருந்தது. ராதாவை இழந்த சோகத்தில் இருக்கையில் தனது தாயார் வந்து இப்படிக் கேட்டதை அவனால் பொறுக்க முடியவில்லை. அடுத்தது, அவனது காயத்தின் வேதனை. இவையிரண்டும் இல்லாவிட்டால் இவன் தனது வழமையான பாணியிலேயே சிரித்துக் கதைத்து தனது மறுப்பைத் தெரிவித்திருப்பான். ஏழ்மையான குடும்பச் சூழ்நிலை ஏழு சகோதரிகள். குடும்பத்தின் மீது அவனுக்குப் பாசமிருந்ததுதான், ஆனாலும் அதைவிட தேசத்தின் மீதிருந்த பாசம் கூடுதலாக இருந்தது.

இந்திய ராணுவத்துடனான போர் ஆரம்பித்ததும் இவனுக்கு ஜி.பி. எம்.ஜியுடன் நின்று போரிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. குளப்பிட்டி, வட்டுக்கோட்டை, ஏழாலை போன்ற இடங்களில் இந்தியப் படையினர் இவனது அணியிடம் பேரிழப்பைச் சந்தித்தனர்.

இறுதியாக 04- 08- 88 இல் நித்திகைக் குளத்தில் இந்திய இராணுவத்துடனான மோதலில் இவன் வீரச்சாவெய்தினான். நித்திகைக்குளத்தில் இருந்த எமது முகாமொன்றை கைப்பற்றிய இந்திய இராணுவம், அங்கிருந்து தாம் புறப்பட்ட முகாமிற்கு திரும்பிச் சென்றது. இவ்வாறு திரும்பிச் செல்லும் வழியில் அவர்களுக்கு விழுந்த அடி மீண்டும் அதே முகாமிற்குத் தான் வழிகாட்டியது. அதனால் திரும்ப அங்கேபோய் நின்றுகொண்டு தமது அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானித்தனர். இந்நிலையில் "நீ போனாலும் அடிப்போம், வந்தாலும் அடிப்போம்" என்று இந்திய இராணுவத்தினருக்கு படிப்பிப்பதற்காக அந்த முகாம் மீது தாக்குதல் நடத்த தீர்மானித்தான் சோமேஸ். மிகவும் கிட்டிய தூரத்தில் தான் நின்று நடத்தப்போகும் அந்தத் தாக்குதல் எப்படி நடக்கப்போகிறது என்பது அவனது மனத்திரையில் தெரிந்தது. அதனால் பத்து கைக்குண்டுகளுடனேயே சென்றான். அங்கிருந்த தனது அயற்கிராமத்தவனாகிய நெடுமாறனிடம், "இந்தச் சண்டையில் நான் செத்தா வீட்டுக்காரருக்கு அறிவிச்சிடடாப்பா? அவை இப்ப இடம்பெயர்ந்து விசுவமடுவில்தான் இருக்கினம், அது உனக்குத் தெரியும்தானை?" என்று கேட்டான். அவன் திட்டமிட்டபடியே சண்டை மிக மூர்க்கமாக நடைபெற்றது. பத்து கைக்குண்டுகளும் முடிந்த நிலையில் திரும்ப வந்து, மீண்டும் பல கைக்குண்டுகளை எடுத்துக் கொண்டு போய்ப் போரிட்டான் சோமேஸ். அவன் திட்டமிட்டபடியே போர் மிகவும் மூர்க்கமாக நடைபெற்றது. அந்தத் தாக்குதலில் எல். எம். ஜி சுடுகுழல், பிறவுன் எல்.-எம். ஜி சுடுகுழல், பல ரவைகள் இப்படியாக பல ஆயுதங்கள் நமக்குக் கிடைத்தன. ஆனால், நாம் சோமேசை இழந்துபோனோம்.

பொது அறிவு சம்பந்தமான விடயங்களில் சந்தேகம் ஏற்படும்போது எமக்கு விளக்கமளிக்கும் சோமேஸ் -எவர் தவறுவிட்டாலும் நக்கீரன் பாணியில் அதே சமயம் அவர்களது மனம் கோணாமல் நகைச்சுவையாகவே அத்தவறைச் சுட்டிக்காட்டும் சோமேஸ் -போராளிகளின் எந்தப் பிரச்சினையானாலும் தனக்கு அப்பால் போகாத நிலையில் தீர்த்துவைக்கும் சோமேஸ் -அந்த பத்தாவது முகாமின் கதாநாயகனான சோமேஸ் -கோயம்புத்தூர் மக்களின் மனதில் என்றும் நிறைந்திருக்கும் சோமேஸ் - இன்று இல்லை என்னும் போது எம்மால் நம்ப முடியாமலிருக்கிறது. இவனை நினைக்கும்போது மிக முக்கிய சம்பவமொன்று நினைவிற்கு வருகிறது. இந்தியப்படையுடன் போர் தொடங்கிய பின்னர், ஒவ்வொரு இடமாக இந்தியப்படை பிடித்து வந்தது. நாம் யாழ். மாவட்டத்தைவிட்டு வன்னிக்காடுகளுக்கு போயிருந்தோம். தொடர்ச்சியான போர்களைப்பை ஏற்படுத்தியிருக்க தம்மை அடுத்து என்ன நடக்குமோ என்ற நிலை. இதைப்பற்றிப் பலரும் பலவிதமாகக் கதைத்துக் கொண்டிருந்தனர். அப்போது சோமேஸ் சொன்னான் ... "இனித்தான் இந்தியன் ஆமி வாங்கப்போறான், எப்படிக் காடு இருக்குதெண்டு படிக்கப்போறான், நாங்கள் இவனுக்குப் படிப்பிச்சுக்காட்டுவம்". சோமேஸ் சொன்ன பாணி அனைவருக்கும் புது உற்சாகத்தை ஊட்டியது. உறுதியுடன் தோள்களில் ஆயுதங்களை மாட்டிக்கொண்டனர். சோமேஸ் சொன்னதுபோலவே இந்திய இராணுவம் தமிழீழக் காடு எப்படி இருக்கின்றது என்பதைப் படித்தது. அதற்காக நிறைய விலை கொடுத்தது இந்திய இராணுவம். எமதுமண்ணை விட்டகன்றதும் காட்டுக்குள்ளிருந்து மீண்டும் யாழ். குடாவை நோக்கி வந்தோம். வரும் வழியில் இவன் "இந்தியன் ஆமி இனித்தான் வாங்கப் போறான்" என்று கூறி எமக்கு உற்சாகமூட்டிய இடத்தைக் கண்டோம். அன்றைய காட்சியை நினைக்கும்போது நெஞ்சு கனத்தது. அந்த இனிமை இனி இல்லைத்தான். ஆனால் நாம் சோர்வாக இருப்பது அவனுக்குப் பிடிக்காது. அதனால், மீண்டும் எமது துப்பாக்கியை சரி பார்த்தபடி வண்டியில் ஏறினோம். அவன் பிறந்த இடமான பலாலியை பார்க்க வேண்டும் என்ற அவசரத்துடன். இப்போது, அவன் தனது தாய்க்குக் கூறிய வாசகம் நினைவுக்கு வருகிறது. 'இது எல்லாத் தாய்மாரும் சண்டைக்குப் போ என்று பிள்ளையளை அனுப்புற நேரம்'.

■செந்தாளன்.

புதிய தேசம்

மகிழ்ச்சி வெள்ளத்

முப்பது ஆண்டு கால சுயநிர்ணய போராட்டம் வெற்றி பெற்றது எரித்திரியா தேசத்திற்கு 24. 05. 1993 முதல் சுதந்திரம்

1991ம் ஆண்டின் நடுப்பகுதியில், எரித்திரியாவுக்கும் எத்தியோப்பியாவுக்கும் இடையிலான யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. எரித்திரியா மக்கள் விடுதலை முன்னணி (Eritrean People's Liberation Front - EPLF) தலைநகரான அஸ்மரா(Asmara)வுக்குள் புகுந்து, ஆபிரிக்காவின் 'மிகப்பெரிய எண்ணிக்கையிலான இராணுவத்தைக் கொண்ட இராணுவம்' என வர்ணிக்கப்பட்ட, எத்தியோப்பிய இராணுவத்தின் மேல் இறுதித் தாக்குதலை தொடுத்து அஸ்மரா (Asmara)வை விடுவித்தது. 1991ம் ஆண்டு வைகாசித்திங்கள் 27ம்நாள், எரித்திரியாவின் தற்காலிக அரசாங்கத்தின் (Provisional Government of Eritrea) செயலாளர் நாயகம் இசையாஸ் ஆவ்வெட்கி(Issaias Afiverki), எரித்திரியாவின் சுதந்திரம் குறித்து குடியொப்பம் ஒன்றை, இரு வருட கால எல்லைக்குள் நடத்த விரும்புவதாக அறிவித்தார்.

அடுத்தநாள், எத்தியோப்பியா இயக்கங்கள், அடிஸ் அபபா(Addis Ababa)வை விடுவித்ததுடன் மெங்கிஸ்து கெயிலி மரியம்(Mengistu Haile Mariam) உடைய குரூரமான அரசினையும் தூக்கி வீசினர்.

எத்தியோப்பிய மக்களின் புரட்சிகர ஜனநாயக முன்னணி (Ethiopian Peoples Revolutionary Democratic Front -EPRDF) அடிஸ் அபபாவில் கூட்டிய மகாநாட்டில் 28 ஏனைய கட்சிகளும் அமைப்புக்களும் கலந்துகொண்டன. இம்மகா நாட்டில், கலந்து கொண்டவர்கள், எரித்திரியாவின் மக்கள் சுயநிர்ணய உரிமை உள்ளவர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு, எத்தியோப்பியாவின் தேசிய சாசனத்தில் அது சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென வாக்களித்தனர். அத்துடன் எத்தியோப்பியாவின் புதிய இடைக்கால அரசாங்கம், எரித்திரியாவின் தற்காலிக அரசாங்கம் நடத்த விரும்பும் சர்வதேச மேற்பார்வையின் கீழான குடியொப்பத்திற்கு தனது ஆதரவையும் வெளிப்படுத்தியது.

1993 சித்திரை 07ம் திகதி, எரித்திரியாவின் தற்காலிக அரசாங்கம் எரித்திரியாவின் சுதந்திரம் குறித்து தான் குடியொப்பம் நடாத்தவிருப்பதாக 22-1992 ம் இலக்க சுற்றறிக்கை மூலம் பகிரங்கப்படுத்தியது. தன்னுடைய தந்தையையோ தாயையோ எரித்திரியனாகக் கொண்டு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வசிக்கும் அனைவரும் எரித்திரியக்குடிகளாகக் கணிக்கப்படுவரென 21-1992 ம் இலக்கச் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டது. அத்துடன் நாட்டின் யுத்த நிலை காரணமாக வெளிநாடுகளில் எரித்திரியரல்லாத மக்களிடை , அந்த அந்த நாட்டின் குடியுரிமையுடன் வாழும் எரித்திரிய மக்களுக்கு என விசேட விதிகள் சேர்க்கப்பட்டன. அவ்வாறே (சிக்கலான மாநில அமைப்பு ஆரம்பமான) 1952ம் ஆண்டுக்கு முன்னரும் பின்னரும், திருமணத்தினாலும், தத்தெடுப்பினாலும், எரித்திரியாவில் வசிப்பவர்களுக்கு தானாகவே எரித்திரியக் குடியுரிமை கிடைப்பதற்கான விதிகளும் சேர்க்கப்பட்டன. இதன் அடிப்படையில் வாக்காளர் பதிவேடு தயார் செய்யப் பட்டது. சுதந்திரமான குடியொப்ப ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட்டது. குடியொப்பம் இந்த குடியொப்ப ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில், - ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகார அலுவலகத்தின், தேர்தல் பிரிவின் இயக்குனர், கொரசியோ போனியோ(Horacio Boneo), தலைமையில், ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழு, ஆடி மாதத்தில், அஸ்மராவுக்கு வந்தது. 1992 மார்கழியில் , ஐக்கிய நாடுகள் சபை எரித்திரியாவின் குடியொப்பம் சரியான முறையில் நடைபெறுகிறதா என்பதை அவதானிப்பதற்கான ஐக்கிய நாடுகள் பணிக்குழுவை (United Nations Observer Mission to Verify the Referendum in Eritrea - UNOVER) நிறுவுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது. 1993 ன் ஆரம்பத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், சமிர் சன்பாரை (Samir Sanbar) தனது விசேடபிரதிநிதியாகவும், "UNOVER" ஐ தலைவராகவும் நியமித்தார் இவரது தலைமையில் 120 சர்வதேச அவதானிகளும், எத்தியோப்பியாவிலிருந்து வந்த பெருமளவிலான பிரதிநிதிகளும், மற்றும், [illegible] , நடுநிலை நாடுகள் இயக்கம், ஆபிரிக்க ஒற்றுமை இயக்கம் என்பவற்றின் பிரதிநிதிகளும், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, யப்பான், - ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றின் பிரதிநிதி களுமாக 500க்கும் மேற்பட்ட அவதானிகளின் பார்வையின் கீழ், 1993 சித்திரை 23-25 திகதிகளில் எரித்திரிய மக்களிடை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் , குடியொப்பம் நடத்தப் பட்டது. சுதந்திர நாடு "உங்களுக்கு எரித்திரியா சுதந்திரமான இறைமையுள்ள தேசமாகும் தேவையுண்டா? " என்ற கேள்வி வாக்குச்சீட்டில் இடம்பெற்றிருந்தது. பதிவுசெய்யப்பட்ட வாக்காளரில், 98. 52% மானோர் (1, 102, 410 பேர்) குடியொப்பத்தில் பங்கு பற்றினர். இவர்களில் 99. 81% மானோர் (1, 100, 260 பேர்) ஆதரவு தெரிவித்து "ஆம்" என வாக்களித்தனர். இந்தக் குடியொப்பத்தின் அடிப்படையில், 24. 05. 1993 முதல் எரித்திரியா சுதந்திரமான இறைமையுள்ள தனிநாடாக ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நாட்டின் விடிவுக்காய் நீண்டு செ

அடிமை விலங்குடைத்து குறும்பு புன்னகையுடன்....

எரித்திரியாவின் 1, 000 கிலோ மீட்டர் கடற்கரையோரம் அந்நிய சக்திகளின் [illegible] காரணமாகிவிட்டது. 16ம் நூற்றாண்டில் துருக்கியரும்(Turks), 18ம் நூற்றாண்டில் எகிப்தியரும், செங்கடல் கரையோரங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். எரித்திரியாவின் இன்றைய சிக்கல்கள் இத்தாலியரின் காலனித்துவ ஆட்சியுடன் தொடங்குகிறது. 1880-1941 க்கிடைப்பட்ட இத்தாலிய ஆட்சியின் போது கிட்டத்தட்ட 70, 000 இத்தாலியர்கள் எரித்திரியாவில் குடியேற்றப்பட்டனர். 1920களின் பிற்பகுதியில் எரித்திரியாவின் நிலத்தில் அரைப்பங்கினை இத்தாலியர்கள் தங்களுடையது என்றனர். எரித்திரியரின் நிலத்தோடு கட்டுண்ட வாழ்க்கை நிலை மாறி, அவர்கள் இத்தாலியரின் தொழிலாளர் கூட்டமாக மாற்றப்பட்டனர். ஆயினும் இக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார மாற்றங்களும், வாழ்க்கை முறை மாற்றங்களும் எரித்திரிய மக்கள் இடையே தேசியத் தன்மை தோற்றம் பெற வழிவகுத்தது. அயல்நாட்டினரான எத்தியோப்பியரை விட வித்தியாசமான அனுபவங்களைப் பெற்றுக்கொண்ட எரித்திரியர்கள் , எத்தியோப்பியரிலிருந்து தனியான தேசிய இனமாக வளர்ச்சியுற்றனர். 1896இலும் இத்தாலி அதுவா போரில் (Battle of Adua) ஈடுபட்டது. அவ்வேளை எரித்திரியர்களை இத்தாலியர்கள் முதல் தடவையாக ஆயுதமயப்படுத்தி, இத்தாலிய இராணுவத்துடன் சேர்த்து யுத்தத்தில் ஈடுபடவைத்தனர். இதனைத் தொடர்ந்து இரண்டாவது உலக யுத்தத்தில் இத்தாலியர் எரித்திரியரைப் பெருமளவில் ஆயுதமயப்படுத்தி தமது படையில் சேர்த்துக் கொண்டனர்.

1941 இல் இத்தாலி தோற்கடிக்கப்பட்டதும், பிரிட்டிஸ், எரித்திரியாவை கைப்பற்றப்பட்ட எதிரிகளின் பிர

...ம் பிறந்தது

...தில் எரித்திரியா !

...லும் குடியொப்பக் கிழூ!

...ம என்ற வகையில் இராணுவத் ... நிர்வாகத்தின் கீழ் ஆளத் ...ங்கியது. சூடானிய பாதுகாப்புப் (Sudan Defence Force-SDF) ...டிஷாரால் நிர்வாகத் தேவைக் ... கொண்டு வரப்பட்டது. இத் ...வருடைய இடங்களில் பிரிட் ...) நியமிக்கப்பட்டனர். ஆயினும், ...குரிய காணிகளாக மாற்றப் ... எரித்திரிய மக்களின் காணி ...ப் பொறுத்த மட்டில், நீதி ...ப்பதற்கான வழிவகைகள் ...யும் பிரிட்டிஸ் அரசாங்கம் ...வில்லை. இதனால், காணி ... சொந்தக் காரராக இருந்த ...திரியர் அல்லாத நிலச்சுவாந்தர் ...ரும், வெறுப்படைந்த எரித்திரிய ...யிகளுக்கும் இடை மூலவளம் ...ர்பாக சண்டைமூளத் தொடங் ... பிரிட்டிஷாரால் இத்தாலிய ... அரசாட்சி நீக்கப்பட்டு வந் ...யால் இந்த விவசாயிகள்- ...ாளர் போராட்டம் எரித்திரி ...யின் சுயநிர்ணய உரிமைக்கான ...வையை உணர்வதற்கான முதல் ...மாக மாறியது. 1940களில் , பு... வலிமைபெறத் தொடங்கிய ...யோப்பியா எரித்திரியா மேல் ...க்கம் செலுத்தத் தொடங்கிய ...தனை மூன்று வழிகளில் எத் ...ப்பியா செய்யத் தொடங்கியது.

எரித்திரியாவின் மத விவகாரங்களில் தலையிடுதல், எரித்திரியாவின் அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் ஆகியவற்றை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துதல், பயங்கரவாதத்தை வளர்த்தல், என்பனவே அவ்வழிகள் இந்நேரத்தில், இத்தாலியர் காலத்தில் நிலத்தின் மேல் ஆதிக்கம் செலுத்தி வந்த ஒத்தடொக்ஸ் சபை (Orthodox Church), எத்தியோப்பியாவுடன், எரித்திரியா இணைக்கப்பட்டால் தாங்கள் இழந்த நிலத்தை தங்களிடமே தரவேண்டும் என்ற ஒப்பந்தத்துடன், எரித்திரியா-எத்தியோப்பியா இணைப்புக்கு ஆதரவாக மக்களைத் திருப்பத் தொடங்கியது. - 1942 ம் ஆண்டளவில், எத்தியோப்பிய இணைப்புக்கு ஆதரவு இல்லாதவர்களுக்குத் திருமணம், செத்தவீடு, ஞானஸ்நானம் போன்ற சமயக்கடமைகளை, செய்யமுடியாது என ஒத்தடொக்ஸ் சபை அறிவித்திருந்தது. இக்காலத்தில் இருந்த முஸ்லீம் லீக், லிபரல் புரோக்கிரசிவ் கட்சி, புரோ இத்தாலியன் கட்சி, - மஸ்ஸவா முஸ்லீம் தேசிய கட்சி, - யூனியனிஸ்ட் கட்சி ஆகியவற்றில், யூனியனிஸ்ட் கட்சி எத்தியோப்பிய இணைப்புக்கு ஆதரவாக இயங்கியது. அஸ்மராவில் இருந்த எத்தியோப்பியாவின் அதிகாரபூர்வ அலுவலகத்தினர் "சிஃப்டா" (shifta), என்ற சிறிய எண்ணிக்கையான அமைப்புக்கு பணஉதவி செய்து பயங்கரவாதத்தைத் தூண்டிவந்தனர்.
அமெரிக்காவுக்கு ஆதரவாக எத்தியோப்பிய அரசு இயங்கிவந்ததால் , பனிப்போர்ச் சூழலில் தனக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி அமெரிக்கா பகிரங்கமாகவே எத்தியோப்பிய இணைப்புக்கு ஆதரவு காட்டத் தொடங்கியது. 1949, சித்திரையில் நியூயோர்க்கில் நடந்த கலந்துரையாடலில் பிரிட்டன், 75% மான எரித்திரிய மக்கள், சுதந்திரத்தை விரும்புவதாகக் கூறியது. - இருந்தபோதிலும் 02. 12. 1952 இல் அமெரிக்காவின் செல்வாக்கால் ஐக்கிய நாடுகள் சபை, எரித்திரியாவை எத்தியோப்பியாவுடன் சமஸ்டிமுறையில் இணைத்தது. இதுவே எரித்திரியாவின் நீண்ட காலப் போராட்டத்தின் முதலடியாக அமைந்தது.

சமஸ்டி அமைப்பின் கீழ் ஆட்சியைத் தொடங்கிய எதியோப்பியா படிப்படியாக எரித்திரிய மக்களின் உரிமைகளைப் பறிக்கத் தொடங்கியது. அரசியல் சாசனத்தை மீறி தொழிற்சங்கங்கள் தடைசெய்யப்பட்டன. பத்திரிகைகளுக்கு மூடுவிழா செய்யப்பட்டது. நீதிமன்றங்களின் உத்தரவையும் மீறி தேசிய மொழிகள் தடை செய்யப்பட்டன. அரசியல் தலைவர்கள் தப்பிச் சென்று நாட்டை விட்டு வெளியேறினர். 19-59 ல் எதியோப்பிய நீதி முறையினை எரித்திரியா ஏற்க வேண்டும் என்ற மசோதா நிறைவேற்றப்பட்டது. அடுத்த ஆண்டில் எரித்திரிய அரசு என்பதை, எரித்திரியர்களின் நிர்வாகம் என மாற்றினர். 1962ல் எதியோப்பிய அரசர் கேலீஸ் செலசி (HAILE SELASSIE) சமஸ்டிக் காலம் முடிவடைந்துவிட்டது என சமஸ்டி ஆட்சியை அகற்றினார். சட்டவாக்க மன்றத்துள் பொலிசும் சட்டசபையைச் சுற்றி இராணுவமும் நிறுத்தப்பட்ட நிலையில் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆனால், 1952ம் ஆண்டு சட்டபூர்வ இணைப்பிற்குப் பொறுப்பாக நின்ற ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது எந்தவொரு அங்கத்துவ நாடோ எதியோப்பியாவைக் கண்டிக்கவில்லை. சர்வதேச நாடுகள் கண்ணை மூடிக்கொண்டதால் எதியோப்பியாவின் அராஜகம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

தாமே தமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்று உறுதி பூண்ட எரித்திரியர்கள் தமது இராணுவத் தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தி தமது மண்ணின் பல பகுதிகளை மீட்டனர். மசவா துறைமுகம் 1990 ல் மீட்கப்பட்ட பின்னரே உணவு வழங்கல் சமூக நிலைக்கு வந்தது. இறுதியில் 1991 வைகாசி 24ல் அஸ்மாராவை விடுவித்ததன் மூலம் முழு எரித்திரிய மண்ணையும் விடுதலைப் போராளிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் [illegible] சொன்னால் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியின் இராணுவ வெற்றிகளே உலக அரங்கில் எரித்திரியா என்ற ஒரு நாட்டை உருவாக்கியது. அதன் பின்னரே சர்வதேச சமூகம் அதனை அங்கீகரித்து ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு நாடாக ஏற்றுக் கொண்டுள்ளது என்பதே உண்மை ■

விடுதலைக்காய் எதையும் தாங்கும்
விலை மதிப்பற்ற புனித உள்ளங்கள்
விடிவைத் தேடி....

அந்நியனின் அதர்மத்தை எதிர்த்து அறப்போர் தொடுத்த அன்னை

விடுதலைப் புலிகளின் விருப்பத்துக்கு மாறாக இலங்கை -இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகிறது.

இந்திய வல்லாதிக்கப்படைகள் தமிழீழப் பிரதேசத்தை ஆக்கிரமித்து கொள்கின்றன. தமிழீழ மக்களும் உண்மையின் சூத்திரத்தை உணர்ந்து கொள்ளாது இந்திய ஆக்கிரமிப்புப் படையை கையசைத்து வரவேற்றனர்.

தமிழ் மக்களின் பாதுகாவலர்கள் வந்து விட்டார்கள் என எண்ணி மகிழ்ந்தனர்.

"சிங்களப்படை இனிமேல் எம்மை எதுவும் செய்து விடமுடியாது"

சிறீலங்கா அதிரடிப் படையினரின் கொலைக் களத்தில் சிக்கித் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர்களின் எதிர்பார்ப்பு.

அன்னை பூபதியும் அப்படித்தான் நம்பினாள். தனது இரண்டு பிள்ளைகளைச் சிங்களப்படை, இரத்த வேட்டைக்கு இரையாக்கியதை நினைத்து, "இனிமேல் இந்த அதிரடிப்படை வெளிக்கிட்டும் பாப்பம்... " அன்னையின் ஆவேசம் கவர்ந்த வார்த்தைகள். 1987 அக்டோபர் 10-ம் நாள் இந்திய இராணுவத்தின் வல்லாதிக்க அடக்குமுறை, தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட நாள். ஈழத்தமிழினத்தின் விடிவுக்கென வெளுத்த வானம், மீண்டும் கருமேகங்களால் சூழ்ந்து கொண்ட நாள்.

இந்திய யுத்தம் வெடித்து தென்தமிழீழம் வரை பரவுகிறது.

தென் தமிழீழத்தின் தெருவோரம் எங்கும் தமிழனின் பிணங்கள். இரத்த வெள்ளத்தில் மிதந்த நாட்கள். சிங்கள சிறீலங்கா இராணுவம் புரிந்து வந்த மனிதப் படுகொலைகளுக்கு மகுடம் சூட்டுவது போல் இந்தியப் படுகொலைகளாலும், பாலியல் வன்முறைகளாலும், மட்டுநகர் வீதிகளில் மலிந்த நாட்கள். இவ்வேளையில் தான் "அன்னை பூபதி" ஆவேசத்தோடு அன்னையர் முன்னணியினரை அணிவகுத்து அகிம்சைப் போரை ஆரம்பித்தாள்.

இந்திய இராணுவத்தின் கிராமியப் படுகொலைகள்.

22-10-87 அன்று, காலை 10 மணியிருக்கும்.

இந்திய கொலை வெறிப்படையின் கனரக வாகனங்கள் கதறிக் கொண்டு மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிராமத்திற்குள் நுழைகின்றது. ஆயிரக்கணக்கான இந்தியப் படையினரால், சத்துருக்கொண்டான் கிராமம் சுற்றி வளைக்கப்படுகின்றது.

ஓலைக் குடிசைக்குள்ளே சொந்த தொழில் செய்து சீவனம் செய்யும் அப்பாவிப் பொதுமக்கள் எதுவுமே தெரியாது திகைத்து நிற்கின்றனர். கொலை வெறி கூர்க்கா படையினர் ஓலை குடிசைகளை தீ வைத்து கொழுத்தினர். உயிரைக் காப்பாற்ற ஓடித் தப்ப எண்ணியவுடன் பிறப்புக்கள் உயிரோடு கொழுத்தப்பட்டனர். மானமே பெரிது என்று வாழ்ந்த கிராமத்து பெண்கள் துடிக்க துடிக்க ஆடு மாடுகள் போல் அறுத்தெறியப் பட்டனர்.

அவர்கள் அன்று எழுப்பிய அவல ஓலங்கள் இன்னும் ஓயாது தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. இந்தியப் படையினர் இக்கிராமத்தை துவம்சம் செய்து விட்டு அயல் கிராமத்திற்கும் தொடர்ந்தனர்.

தன்னாமுனையிலே, கிறிஸ்தவ பாதிரியினரால் நடாத்தப்படும் வயது வந்த பெண்பிள்ளைகளை பராமரிக்கும் நிலையத்திற்குள் இந்தியப்படை புகுந்தது. பாதிரிமார் என்பதால் உடைகளைப் பார்த்ததும் தங்களை இந்திய அமைதிப் படை எதுவும் செய்ய மாட்டாது என்ற நம்பிக்கையில் பிள்ளைகளை அறைக்குள் நிறுத்தி விட்டு பாதிரிமார் வாசலில் காவல் நின்றனர். காம வெறி பிடித்த இந்திய சிப்பாய்களுக்கு துறவிகளை மதிக்கும் பக்குவம் இருக்கவில்லை.

பாதிரிமாரை இழுத்து தள்ளி விட்டு உள்ளே புகுந்த கொலைப் படையினர், அநாதரவாகி அடையம் தேடி நின்ற இளம் பெண்களை ஓடித்தப்ப முடியாத அறைக்குள் பூட்டி வைத்து மிருகத் தனமான முறையில் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர்.

அந்த பராமரிப்பு நிலையத்தில் இருந்த பெண்கள் சிலர் தங்களது குழந்தைகளையும் இழுத்துக்கொண்டு கடற்கரை வழியாக மட்டக்களப்பை நோக்கி ஓட்டம் எடுத்தனர். கருவேப்பங்கேணி, இருதயபுரம், முகத்துவாரம் ஆகிய கிராமங்களில் அகதிகளாக ஓடிச் சென்று தங்களுக்கு ஏற்பட்ட அவலத்தை எடுத்துக் கூறினர். மக்கள் ஒன்று சேர்ந்தனர்; உதவிகள் புரிந்தனர்; ஆறுதல் கூறினர். அன்னையர்கள் உள்ளம் குமுறினர். இந்தியப்படையின் அமைதிப் போர்வையில் நம்பிக்கை இழந்தனர்.

இதே சமயம் ஆயிரக்கணக்கில் இந்தியப்படையினர் மட்டக்களப்பு நகருக்கு கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். மூலைக்கு மூலை முகாம்கள் போடப்பட்டன. வீதி வீதியாக கொலை வெறி கொண்டு அலைந்தனர் கூர்க்காப்படையினர்.

களுவாஞ்சிக்குடியில் மற்றுமோர் ரண களம்.

சத்துருக்கொண்டான் படுகொலை களத்தின் இரத்த வாடை மறையுமுன்னர், மற்றுமோர் படுகொலைக்களம் களுவாஞ்சிக்குடியில் இடம் பெற்றது.

23-11-1987 களுவாஞ்சிக்குடி பிள்ளையார் ஆலயத்திற்கு முன் இந்தியப்படையினர் குவிக்கப்பட்டனர். பாடசாலைக்குள் பாடம் படிப்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர்கள் இழுத்து வரப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஓர் ஆசிரியையை தலை முடியில் பிடித்து இழுக்கின்றான் ஓர் இந்தியச் சிப்பாய். முடி கையோடு வந்து விடுகின்றது. "ஆ... பொய் முடி.... நீ.. புலி" எனக் கத்துகிறான் இந்தியன். அவ்விடத்திலேயே அந்த ஆசிரியை சுட்டுக் கொல்லப்படுகின்றாள்.

பாவம் அந்த அப்பாவி ஆசிரியை. தன் படிப்பைத் தொடங்குவதற்கு வீட்டிலே வசதி இல்லாத நிலையில், நெல் குற்றும் ஆலையில் அவள் வேலை செய்து வந்தாள். அப்பொழுது இயந்திரத்தினுள் தலைமயிர் புகுந்ததால் அவளது முடிகள் பிடுங்கப்பட்டன. முடியில்லாத நிலையில் பொய்முடி தரித்து ஆசிரியையாக தொழில் புரிந்த அந்தப் பெண்ணின் சோக வரலாறு காமவெறி கொண்ட இந்தியனுக்கு எங்கே தெரியப்போகிறது?

இந்திய இராணுவத்தினரின் கிராமியப் படுகொலைகள்

வாசிகசாலைக்குள் இருந்த இளைஞர்கள் இந்தியப் படையினரால் இழுத்து வரப்படுகின்றனர். பிள்ளையார் ஆலய மதிலிலே சுவரோடு சேர்த்து நிறுத்தப்படுகின்றனர். இராட்சத கவச வாகனம் அவர்களை நோக்கி விரைந்து வந்து கொண்டிருக்கின்றது.

இழுத்து வரப்பட்டதை அறிந்த ஓர் இளைஞனின் தாய் மூச்சு வாங்க ஓடிவந்து. இந்தியனிடம் இரந்து ஓலமிடுகின்றாள். கவச வாகனத்தின் இரைச்சல் அவள் இட்ட ஓலத்தை அமுக்கிவிட்டது.

சிகரிகாலன்
துணைப்பொறுப்பாளர்
அரசியல்துறை

அவளின் கண்ணே திரிலேயே அவளது பிள்ளை மதிலோடு நெரித்து கொல்லப்படுகின்றான். இரத்தம் பீறிட்டு, மதில் சுவர் இடிந்து சிவப்பாகின்றது.

இந்தியப் படையினர் வீடு வீடாகப் புகுந்து காம வேட்டையாடினர். வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. உடமைகள் சூறையாடப்பட்டன. கடைகள் களவாடப்பட்டு கொளுத்தப்பட்டன. காம வேட்டையில் தன் மனைவி இழுத்துச் செல்வதைத் தடுத்து நிறுத்தி இந்தியனுடன் சமர் புரிந்த கணவன் அவ்விடத்திலேயே சுட்டுக் கொல்லப்படுகின்றான். இந்தியப் படையின் கொடுமைகள் தென் தமிழீழம் முழுவதும் கோர தாண்டவம் புரியத் தொடங்கியது. பெண்கள் வீதிகளுக்குச் செல்ல முடியாது இந்திய வெறிப்படைக்கஞ்சி வீடுகளில் அடங்கிக் கிடந்தனர்.

மட்டக்களப்பு நகர் பகுதிக்குள்ளே வெள்ளைப்பாலத்தால் வீதியில் சென்று கொண்டிருந்த இளம் பெண்கள், ஒரு கடைக்குள் இழுத்து வரப்பட்டு பட்டப் பகலிலே பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். இச் செய்தி நகரையே உலுக்கியது. மட்டக்களப்பு தாய்மார் பதைபதைத்தனர்.

இனியும் பொறுத்திருக்கமுடியாது. இழப்புக்களைத் தாங்க முடியாது. அன்னையர்கள் அணிதிரண்டனர். இந்தியப்படை பெண்களுக்கு இழைக்கும் அநீதிகளைக் கண்டு அன்னையர் முன்னணியாக அணிவகுத்தனர்.

"இந்தியப்படை உடனடியாக யுத்த நிறுத்தத்தை அறிவிக்கவேண்டும்."

"விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவேண்டும்."

எனும் கோரிக்கையை முன் வைத்து திலீபன் காட்டிய அகிம்சைப் போரில் மாமாங்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் குருந்தமர நிழலில் அடையாள உண்ணா நோன்பு அனுட்டித்தனர்.

உண்ணா விரதப் போருக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு மாவட்டத்தின் அன்னையர்கள், பாடசாலை மாணவிகள் அணி அணியாகத் திரண்டனர். மாமாங்க ஆலயம் மக்கள் வெள்ளமாய் கரை புரண்டது.

இந்தியப் படைக்கெதிராக மீண்டுமோர் உண்ணா விரதப்போர். காந்தி தேசத்தின் முக மூடியை கிழிக்க அன்னையர் முன்னணியினர் அலையாய் எழுந்தனர்.

பாரதப் படைகளுக்கு எதிராக மீண்டுமோர் உண்ணா விரதப் போர். பெண்கள் பேரலையாய் தென் தமிழீழத்தின் தெருவெங்கும் திரண்டு நிற்பதைக்கண்டு மிரண்டது இந்தியப்படை. எப்படியாவது அன்னையர் முன்னணியினரின் ஆவேச நெருப்பை அணைத்துவிட ஆலோசனை நடாத்தியது அமைதிப்படை.

சந்தைக்குள் நடைபெற்ற படுகொலை.

இவ்வேளையில் தான் மட்டக்களப்பு நகருக்குள் சிங்கள சிறீலங்காப் பொலிசாரின் வெறிகொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் இடம் பெற்றது.

மட்டக்களப்பு நகரச் சந்தை சனக்கூட்டத்தால் நிரம்பி வழிகின்றது. மக்கள் தங்கள் அன்றாட தேவைக்கான பொருட்களை அச்சம் கலந்த மனோ நிலையில் அவசர அவசரமாக வாங்கிக் கொண்டு இருந்தார்கள். தமிழ், முஸ்லிம் வியாபாரிகள் சுறு சுறுப்பாக வியாபாரம் செய்து கொண்டு இருந்தார்கள். அவ்வேளை சிங்கள காவல் படையினர் சந்தையை திடீரென சுற்றி வளைத்தனர்.

எதுவுமே அறியாத அப்பாவி பொதுமக்கள், ஆண்கள், பெண்கள் தமிழர்கள், முஸ்லீம்கள், சிறுவர்கள், குழந்தைகள், மாணவர்கள் என பேதமின்றி தாக்கப்படுகின்றார்கள். சிங்களப் பொலிசாரின் கண்மூடித்தனமான தாக்குதல்களில் மக்களின் மண்டைகள் பிளந்தன, கை கால்கள் முறிந்தன, எலும்புகள் நொருங்கின, பொலிசாரின் துப்பாக்கிகள் ரவைகள் கக்கின, வீதிகளில் பிணங்கள் குவிந்தன, வியாபாரிகள் பலர் கடைகளுக்குள் பொருட்களோடு சேர்த்துக் கொழுத்தப்பட்டனர்.

நெடுநாள் இரத்தப் பசி கிடந்த சிங்களக் காடையர் கூட்டம் தமிழ், முஸ்லிம் மக்களைக் கொன்று குவிப்பதை, இந்திய அரக்க படை கண்டு களித்துக் கொண்டிருந்தது. தமிழ்மக்களின் படுகொலைகளுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும், சொத்தழிவுகளுக்கும் இந்திய -சிங்கள ஆயுதப்படைகள் போட்டி போட்டுக்கொண்டு செயல்படுவதைக் கண்டு அன்னையர் முன்னணியினர் ஆவேசம் கொண்டனர்.

"இனி மேல் எமக்கு எந்த அரசுகளும் பாதுகாப்பு வழங்கப் போவதில்லை" இழப்புக்களால் இறுகிப்போன இதயங்களில் இருந்து வெளிப்பட்ட வார்த்தைகள் இவைகள்.

சுயமரியாதையோடு தமிழினம் தலை நிமிர்ந்து வாழவேண்டுமானால் ஆட்சியாளர்களின் அதர்மத்தை அடக்கியே ஆகவேண்டும் என அன்னையர் முன்னணியினர் முடிவெடுத்தனர். அனுட்டிக்கப்பட்டுவந்த அடையாள உண்ணாவிரதம் சுழற்சி முறை தொடர் உண்ணாவிரதமாக மாற்றப்பட்டது.

இந்தியாவுக்கு எதிரான பிரச்சாரம் உலகளாவிய ரீதியில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. இவ்வேளையில் தான் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் அகில இந்திய வானொலி அறிவிப்பு வெளியாகின்றது.

"இந்திய அமைதிப்படை இலங்கைத் தமிழ் மக்களுக்கெதிராக போராடவில்லை. விடுதலைப்புலிகளுக்கு எதிராக போராடுகின்றது."

அன்னையர் முன்னணியினரின் அகிம்சைப் போர் மக்கள் போராட்டமாக மாறி அது பாரத அரசுக்கெதிராக உலகப் பத்திரிகையாளர்கள் மூலம் ஏற்படுத்திய தாக்கத்தை மூடி மறைக்கவே இவ்வறிவிப்பு ராஜீவ் காந்தியினால் விடுவிக்கப்பட்டது. அத்தோடு "அன்புவழி", "வெற்றிமாலை", "தேசக்காரங்கள்" நிகழ்வுகளை தனது இராட்சத பிரசார சாதனங்கள் மூலம் ஒலிபரப்பிய இந்திய அரசு, தமிழ் மக்களுக்கெதிரான இந்திய இராணுவத்தின் படுகொலைகளை மூடி மறைக்க முயன்றது.

அனைத்துலக ரீதியாக இந்திய அரசுக்கெதிராக ஏற்பட்டுள்ள அபகீர்த்திகளை அடக்கிவிட இந்திய உயர் அதிகாரிகள் முடிவெடுத்தனர்.

அன்னையருடன் நடத்திய பேச்சுக்கள்.

ஜனவரி 7-ம் திகதி திருமலையில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அன்னையர் முன்னணியின் நிர்வாகக்குழுவுக்கு அழைப்பு வந்தது. இப்பேச்சுவார்த்தையில் இந்திய அரசு தரப்பில் இராணுவ உயர் அதிகாரி பிரிகேடியர் சண்டேஸ் கலந்து கொள்கின்றார்.

"புலிகள் ஆயுதங்களை கையளிக்க வேண்டும். அதன் பின்னர் பேச்சுவார்த்தை நடாத்தச்

தொடர்ச்சி 11ம் பக்கம் ....

அந்நியனின் அறப்போர்

சம்மதம் தெரிவிக்க வேண்டும்" என அன்னையர் முன்னணியிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. அன்னையர்கள் தாம் கொண்ட நிலைப்பாட்டில் இருந்து அசையவில்லை. தமது கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்க வேண்டுமென வற்புறுத்தினர். பேச்சுவார்த்தையின் முடிவுகள் டெல்லிக்கு அனுப்பப்பட்டு பதில் தரப்படும் என அறிவிக்கப்படுகின்றது. முடிவுகள் எதுவுமே கிடைக்கவில்லை. உண்ணாவிரதப்போர் தொடர்கின்றது.

பெப்ரவரி 10 ஆம் நாள், மீண்டும் பேச்சுவார்த்தை

அன்னையர் முன்னணியின் நிர்வாகக்குழு கொழும்பிற்கு அழைக்கப்படுகின்றது. இந்திய தூதுவர் டிக்சிட் பேச்சுவார்த்தை நடாத்துகின்றார். மீண்டும் அதே வேண்டுகோள். "புலிகள் ஆயுதங்களைக் கையளித்து பேச்சு வார்த்தைக்கு முன்வரவேண்டும். நாம் அவர்களுக்கு எல்லாவித உதவிகளும் செய்யத் தயாராக இருக்கின்றோம். இதை அன்னையர் முன்னணியினர் புலிகளிடம் வற்புறுத்திக் கேட்க வேண்டும்" என்று மிரட்டலுடனான வேண்டுகோள் விடுக்கின்றார் டிக்சிட். டிக்சிட்டின் வேண்டுகோளைக் கேட்ட அன்னையர்கள் உள்ளம் குமுறுகின்றனர். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாது, "புலிகள் எங்கள் பாதுகாவலர்கள். நீங்கள் தான் யுத்த நிறுத்தத்திற்கு அறிவிக்க வேண்டும்" என, ஓரளவு மிரட்டலுடன் பேசுகிறார்கள். இதை அவமரியாதையாகக் கருதிய டிக்சிட்டின் முகம் கருங்கிப்போகின்றது. "பெண் என்பதால் பேசாமல் செல்கின்றேன்" என ஆங்கிலத்தில் கூறிவிட்டு எழுந்து செல்கின்றார் டிக்சிட்.

இராணுவத்தால் அன்னையர் சுற்றி வளைப்பு

மாமாங்க ஆலயம் மக்கள் வெள்ளத்தால் நிறைந்து காணப்படுகின்றது. கொழும்புக்குப் பேச்சுவார்த்தைக்குச் சென்றுள்ளார்கள். ஏதாவது ஒரு முடிவோடு தான் வருவார்கள் எனும் எதிர்பார்ப்போடு மக்கள் காத்து நிற்கின்றனர்.

டிக்சிட்டின் பேச்சுவார்த்தை முறிந்துபோன செய்தி, மட்டக்களப்பிற்கு அறிவிக்கப்பட்டதும் இந்திய இராணுவ கனரக வாகனங்கள் பேரிரைச்சலோடு மாமாங்க ஆலயத்தை மக்களோடு சேர்த்து சுற்றிவளைத்துக் கொள்கின்றது. அப்பகுதியில் தற்காலிக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்படுகின்றது. கூடி நின்ற மக்கள் இடத்தை விட்டு அசையாது கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

12, 13, 14 ஆம் நாட்கள்,

ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாகப் பிறப்பிக்கப்படுகிறது. மக்கள் எவருமே வெளியில் நடமாடக்கூடாது என ஒலிபெருக்கியில் அறிவிக்கப்படுகின்றது.

உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு இந்திய இராணுவம் மிரட்டல் விடுக்கின்றது. உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட பெண்கள், மாணவிகள் என நூற்றுக்கணக்கானோர் இருந்த இடத்தை விட்டு நகராது ஆலய மணல் வீதியிலேயே அமர்ந்து விட்டனர். அன்னையரும் சுற்றிவளைக்கப்பட்ட மக்களுக்காக மூன்று நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதமிருந்தனர்.

இந்திய இராணுவம் மேற் கொள்ளும் மிரட்டல் நடவடிக்கைகள்

அதர்மத்தை எதிர்த்து கொடுத்த அன்னை...

தென் தமிழீழத்தில் அன்னையரின் எழுச்சி

எதற்குமே அஞ்சாது அடிபணியாது நின்ற மக்களின் மன உறுதியைக் கண்டு அஞ்சியது பாரத அரசு.

வேறு வழியின்றி ஊரடங்குச் சட்டம் நீக்கப்படுகிறது. இராணுவ சுற்றி வளைப்பு வேலி தளர்த்தப்படுகிறது. உண்ணாநோன்பு தொடர்கிறது. தங்கள் உறுதியான நடவடிக்கைகளினால் ஊரடங்கு உடைத்தெறியப்பட்டதை எண்ணி மகிழ்ந்தனர்.

15 ஆம் நாள்,

அவமானத்தை தாங்கிச் சென்ற பாரதப்படையணி, அன்னையர் முன்னணியினரின் ஆலோசகர் கிங்ஸ்லி இராசநாயகத்தின் வீட்டைச் சுற்றி வளைக்கின்றது.

ஆலோசகர் கைது செய்யப்படுகின்றார். அவ் விடத்திலேயே அவர் நையப்புடைக்கப்பட்டு பின்னர் முகாமிற்கு ஏற்றிச் செல்லப்படுகின்றார்.

அன்னையர் முன்னணியினரின் செயல்பாடுகளுக்கு எதிராக இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அழுத்தங்கள் அதிகரிக்கப்பட்டன.

அன்னையர் முன்னணி அமைப்பில் மன உறுதியை உடைப்பதற்கு பலவிதமான தந்திரோபாயங்கள் கையாளப்படுகின்றன. ஆனாலும் அன்னையர்கள் அசையவில்லை. மக்களின் மகோன்மத ஆதரவோடு தங்கள் உறுதியின் வலுவை உலகுக்கு உணர்த்துவதற்கு முடிவெடுத்தனர்.

சாகும்வரை உண்ணா விரதம்

திலீபன் காட்டிய போராட்டப் பாதை; சாகும் வரை உண்ணா விரதம்; ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணா விரதம் ஆரம்பித்தான் திலீபன்.

புலிகளுக்கு ஆதரவாக இரண்டு அம்சக்கோரிக்கையை முன் வைத்தனர் அன்னையர்கள்.

திலீபன் விரும்பிய மக்கள் புரட்சி, தென்தமிழீழத்திலே அன்னையர் எழுச்சியாக வெடித்தது.

சுழற்சி முறைத்தொடர் உண்ணாவிரதத்தை, சாகும் வரை உண்ணா விரதமாக கடைப்பிடிப்பதென அன்னையர் முடிவெடுத்தனர்.

"நான் தான் முதலில் உண்ணா விரதம் இருக்கப் போகின்றேன்" என அன்னை பூபதி தனக்கே உரிய இயல்பான உணர்ச்சி வேகத்தோடு முன்வந்தார்.

"இல்லை நான் இருக்கப் போகின்றேன்" என வாதிட்டார் அன்னம்மா டேவிட்.

மக்களின் விடிவுக்காக ஆயுதபாணிகளாக வெடிகுண்டுகளைத் தங்கள் உடலோடு தாங்கிச் சென்று தங்கள் இன்னுயிரைத் தற்கொடை செய்யும் கரும்புலிகளும், ஆயுதங்களற்ற நிலையிலும்,

"மக்களுக்காக நான் மரணிக்கத் தயார்" என நிரூபித்த திலீபனும் புலிகளின் போராட்டப்பாதையின் மைல் கற்கள். மக்களும் புலிகள் தான் என்பதை நிரூபிக்கத் தங்கள் உயிரைத் தற்கொடை செய்ய அன்னையர்கள் போட்டி போடுவதைப் பார்த்து இந்திய வல்லாதிக்கத்தின் புருவங்கள் உயர்ந்தன.

அன்னையர் முன்னணியினரின் போட்டியைத் தீர்ப்பதற்கு அதிர்ஷ்டச்சீட்டு குலுக்கப்படுகிறது. அன்னம்மா டேவிட் தேர்ந்தெடுக்கப்படுகிறாள்.

19 ஆம் நாள் 2 ஆம் மாதம் 88 ஆம் ஆண்டு.

மாமாங்க ஆலய முன்றலில் அன்னம்மா டேவிட் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கிறாள். அன்னையர்களின் மன உறுதிமிக்க போராட்ட உணர்வின் இறுக்கம் அதிகரித்துச் செல்வதைத் தடுக்கத் திட்டங்கள் தீட்டியது இந்தியப்படை.

சாகும்வரை உண்ணாவிரதம் அறிவிக்கப்பட்டதும் தென் தமிழீழம் முழுவதும் திரண்டனர் அன்னையர்கள். கிராமம் கிராமமாக ஆதரவு உண்ணாவிரதப் போர் ஆரம்பித்தது. அணி அணியாக ஆதரவு ஊர்வலங்கள் நடந்தன. இந்திய அமைதிப் படை பெண்களுக்கு இழைத்து வந்த கொடுமைகளைத் தடுக்க முக்காட்டுக்குள் முகம் புதைத்து, மூலைக்குள் முடங்கிக் கிடந்த முஸ்லிம் பெண்கள் வீதியில் திரண்டனர். மாமாங்க ஆலய [illegible] அணி [illegible]

மாமாங்க ஆலய முன்றலில் உள்ள இந்தியப்படையின் முகாம்; வெள்ளம் போல் திரண்ட பெண்களால் முற்றுகைக் குள்ளாக்கப்படுகிறது. உண்ணாவிரதப்போரை நிறுத்த வேண்டுமென ஆயுதம் தாங்கிய இந்தியப்படை, அன்னையரை மிரட்டுகிறது. அன்னம்மா டேவிட் மரணிக்க நேர்ந்தால் மக்கள் மீது கொலைக் குற்றம் சாட்டி வழக்குத் தொடருவோம் என அன்னையர் முன்னணியினரை மிரட்டுகிறார்கள் இந்தியப் படையினர்.

இந்தியப் படையினரின் மிரட்டல்களுக்குப் பணியாது அன்னம்மா டேவிட்டின் உண்ணாவிரதம் தொடர்கிறது.

இந்த உண்ணாவிரதத்தை முறியடிப்பதற்கு பகீரத முயற்சிகளை மேற்கொள்கிறது இந்திய இராணுவம். அன்னம்மாவின் பிள்ளைகளை கைது செய்து, அவர்களுக்கு ஆசை வார்த்தை கூறி, அவர்களிடமிருந்து ஒரு கடிதத்தை எழுதி வாங்குகிறார்கள் இந்திய இராணுவ அதிகாரிகள். அந்தக் கடிதத்தில், அன்னம்மா டேவிட் பலவந்தமாக உண்ணாவிரதத்தில் ஈடுபடுத்தப்பட்டார் என பிள்ளைகள் கூறுவது போல எழுதப்பட்டது.

அந்தக் கடிதத்தை ஆதாரமாகக் காட்டி உண்ணாவிரதமிருந்த அன்னம்மா டேவிட்டை பலவந்தமாக தூக்கிச் செல்கிறது இந்திய இராணுவம்.

இந்திய இராணுவத்தின் நயவஞ்சக நடவடிக்கை காரணமாக அன்னையர் முன்னணிக்கு ஏற்படுத்தப்பட்ட களங்கத்தைக் கண்டு ஆவேசமடைகிறாள் அன்னை பூபதி. அன்னையரின் போராட்ட இலட்சியத்தை வென்றெடுக்க வேண்டுமென உறுதி பூண்ட அவர், சாகும் வரை உண்ணாவிரதத்தை தான் தொடர்வதற்கு முன்வந்தார். அன்னம்மா டேவிட்டிற்கு நேர்ந்தது தனக்கும் நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காக ஒரு கடிதத்தையும் எழுதிக் கொடுத்தார்.

"நான் எனது சுயவிருப்பத்தின் பேரிலேயே எனது கோரிக்கை நிறைவேறும் வரை சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறேன். நான் நினைவிழந்து போகும் நிலையிலும் என்னை எனது கணவனோ, பிள்ளைகளோ, உறவினர்களோ காப்பாற்றவோ, தூக்கிச் செல்லவோ முடியாது" என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அன்னையர் முன்னணியினரின் ஆவேச நெருப்பை அணைத்து விட்டோம், சாகும்வரை உண்ணா விரதத்தைத் தடுத்து விட்டோம். மக்கள் எழுச்சியை மழுங்கடித்து விட்டோம் என இந்தியப்படை எக்காளமிட்டு இரண்டு நாட்கள் ஆகவில்லை. அன்னை பூபதி புயலாய் புறப்பட்டு மாமாங்க வீதியை வலம் வந்தாள். மக்கள் உணர்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். இந்தியப் படைக்கு எதிரான கோசங்களை எழுப்பி அன்னையை வரவேற்றனர்.

19-03-88 சனிக்கிழமை காலை 10. 45 மணி

அன்னை பூபதியின் அகிம்சைப் போர் ஆரம்பித்த நேரம், மாமாங்க வீதியில் அகற்றப்பட்ட இந்தியப்படையின் முகாம் மீண்டும் அவசர அவசரமாக புனரமைப்பு செய்யப்பட்டது. மேலதிக இந்தியச் சிப்பாய்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. பயமுறுத்தல்களும் தொடர்ந்தது.

அலை அலையாக திரண்ட மக்கள்

இந்தியப்படைகளின் மிரட்டல்களும் அடக்குமுறை நடவடிக்கைகளும், அன்னை பூபதியின் உறுதிமிக்க போராட்ட உணர்வுக்கு உரமூட்டிக்கொண்டிருந்தன.

"இந்தியப் படையே திரும்பிப் போ", "அன்னை பூபதியைச் சாகடிக்காதே", "புலிகளுடன் பேசிப் பிரச்சனைகளுக்குத் தீர்வைக் காண்", "தமிழீழ மண்ணைச் சுடுகாடாக்காதே" இவ்வாறு பாடசாலைக்குச் சென்ற மாணவ மாணவியர்கள் கொளுத்தும் வெயிலிலும், கொடிபிடித்துக் கோசமிட்ட வண்ணம் அலை அலையாக அணிதிரண்டு அன்னையவருக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

மட்டக்களப்பு எங்கும் ஊர்வலங்களும், அடையாள உண்ணாவிரதங்களும் நடாத்தப்பட்டன. அன்னை பூபதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி வெகுசனப் போராட்டம் விஸ்வரூபமெடுக்கத் தொடங்கியது. இந்தியப் படைகளின் ஒவ்வொரு முகாம்களும் அன்னையர்களால் சூழப்பட்டு மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அன்னை பூபதியின் அகிம்சைப் போர் மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை என தென் தமிழீழமெங்கும் பரவி மக்கள் எழுச்சிப் போராக மாறத் தொடங்கியது.

இந்தியப்படை மிரண்டது. அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போரைத் தடுப்பதற்கு வழி தெரியாது திணறியது.

அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து அன்னையர்களை அடக்குவதற்கு இந்திய இராணுவத்தினர் முடிவெடுத்தனர்.

அன்னை பூபதியின் அகிம்சைப் போருக்கு ஆதரவு தெரிவித்து ஆரையம்பதியில் இருந்து அன்னையர்களின் மாபெரும் எழுச்சிப் பேரணி பதாகைகளோடும், சுலோக அட்டைகளோடும் கோசங்களை எழுப்பிய வண்ணம் மாமாங்க ஆலயத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஊர்வலத்தை இடைமறித்த இந்தியப்படையினர் அன்னையர் மீது தடியடிப் பிரயோகம் செய்கின்றனர்.

இராணுவ வன்முறையால் ஊர்வலம் சிதறுண்டு கலைகிறது.

இந்தியச் சிப்பாய்களின் இவ் வன்செயல்களைக் கண்டித்து கடைகள் மூடப்பட்டன. பாடசாலைகள் பகிஷ்கரிக்கப்பட்டன. மட்டக்களப்பு எங்கும் கர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்திய இராணுவத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் எதிர் நடவடிக்கைகள் தொடருவதையும் மக்கள் அச்சமின்றி அன்னை பூபதிக்கு ஆதரவு தெரிவிப்பதையும் கண்டு இந்திய அரசு அஞ்சியது.

திடீரென்று மாமாங்க ஆலயம் இந்தியப் படையினரால் சுற்றி வளைக்கப்படுகிறது. மூலைக்கு மூலை சிப்பாய்கள் நிலையெடுத்து நிற்கின்றனர். அன்னை பூபதி அமைதியாகத் தூங்குகின்றாள். அன்னையர்கள் சூழ இருந்து பஜனைகள் பாடுகின்றனர், கிறிஸ்தவ கீதங்கள் இசைக்கின்றனர், சர்வமத அனுஷ்டானங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்திய படையின் மிரட்டல்கள்

ஓர் இந்தியச் சிப்பாய் உண்ணாவிரதப் பந்தலுக்கு ஓடி வருகின்றான் "மாற்று இயக்கத் தோழர்கள் பூபதி அம்மாவைத் தூக்கிச் செல்லப்போகின்றார்கள்" என்று பயபீதியை ஏற்படுத்துகின்றான். ஆலய வீதியில் அமர்ந்திருந்து பஜனை நடாத்திக் கொண்டிருந்த மக்கள் அன்னை பூபதி [illegible] கின்றனர். அன்னையர் முன்னணியினர் ஆத்திரம் கொள்கின்றனர். "எங்கே வரட்டும் பார்ப்போம்; முடிந்தால் தூக்கட்டும் பார்ப்பம், எங்கள் பிணங்களின் மேல் தான் அன்னை பூபதியை அவர்களால் கைவைக்க முடியும்" என ஆவேசத்தோடு ஆர்ப்பரித்தனர்.

இந்தியச் சிப்பாய் கூறுகின்றான் "அப்படி அவர்கள் வந்தால் நாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வோம். நீங்கள் அனைவரும் நிலத்தில் வீழ்ந்து படுத்துக் கொள்ள வேண்டும்." இப்படிக் கூறி விட்டு அவசரமாக ஓடுகின்றான்.

அன்னையர்கள் பூபதி அம்மாவை விட்டு அசையவில்லை. வருவதை எதிர்கொள்ளத் தயார் நிலையில் இருந்தார்கள். இந்தியச் சிப்பாய் கூறியதைப் போல தூரத்தே ஒரு துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்கிறது. அதனைத் தொடர்ந்து மாமாங்க வீதியைச் சுற்றி நிலையெடுத்து நின்ற இந்தியச் சிப்பாய்கள் அனைவரும் ஒரே நேரத்தில் ஆகாயத்தை நோக்கித் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். அன்னையர்களை அச்சுறுத்தி பூபதி அம்மாவின் உண்ணாவிரதப் போரை முறியடிப்பதற்கே இந்தியப்படை இத் தந்திரோபாய நடவடிக்கையில் ஈடுபடுகிறது என்பதைப் புரிந்து கொள்ள அன்னையர் முன்னணியினருக்கு வெகு நேரமெடுக்கவில்லை.

"உன் துப்பாக்கி மிரட்டல்களுக்கெல்லாம் இந்தப் பூபதி அசையமாட்டாள்" களைத்து இளைத்துப்போன பூபதி அம்மாவின் உதடுகள் மெல்லிய ஓசையில் அசைகிறது.

உலக நாட்டு பத்திரிகையாளர்கள் அன்னை பூபதியின் உண்ணாவிரதப் பந்தலை முகாமிட்டனர். அன்னையின் உண்ணாவிரதம் பற்றி உலகப் பத்திரி

தொடர்ச்சி [illegible] பக்கம் ....

சிறு கதை

தந்தையும் தம்பியும்

[illegible]

'சிவத்தார் நல்ல மனுசனடா......'

சிவத்தார் என்னும் சிவப்பிரகாசத்தார் என்னுடைய மேலதிகாரிகளில் ஒருவர். அவரை இவன், என்னுடைய நண்பன் ஒரே அலுவலகத்தில் வேலை செய்பவன் நல்லவர் என்கிறான்.

சிவத்தார் நல்லவர் தானா?

எனக்குள் நெருடல்கள், நல்லவர் என்பதைத் தீர்மானிக்கும் அளவு கோல்கள் எவை? விளங்கிக் கொள்ள கடினமாக இருக்கின்றது. சிவத்தாரை நல்லவர் என்று சொல்வதிலும் பார்க்க வல்லவர் என்று சொல்லலாம் போல் இருக்கின்றது.

எதிரே பரந்து விரிந்து கிடக்கிற கடல். இது கடல் அல்ல சமுத்திரம். நிரைகடலோரம் சிலம்பொலி முழங்கும் திருமலைக்கரை. வானத்து சூரியன் வையத்தை மறக்கத் தொடங்கும் கோலச் சீதள நேரம். கோணேசர் மலைக்கும் வைத்தியசாலைக் குன்றுக்கும் இடையே தூரத்தில் ஆரம் தொடுத்தால் போல் வளைந்து வரிசையாக நிற்கும் மீன்பிடி வள்ளங்கள். வைரமணிகளாய் அவற்றில் மின்னும் தீபங்கள். கடலின் கருமையிலே ஒளிக்கோடுகளாய் நங்கூரமிடுகின்றன. இது என்ன திருமலையாள் அணிந்திருக்கும் மணியாரமோ என மனம் வியக்கின்றது.

கற்பனை சுகமாகத்தான் இருக்கின்றது. ஆனால் அந்த மணி ஆரவளைவு....?

"என்னடா யோசிக்கிறாய்....?"

"இது என்னுடைய கடலடா எங்களுடைய கடல் இருக்கிறோமே இது.... இது எங்களுடைய மண். இதற்கு ஆரம் சூட்டியிருக்கிறார்களே.... அது யார் தெரியுமா?"

எனக்கு குணம் பேதலிப்பது செந்திலுக்கு தெரியும். நீயே சொல்லேன் என்பது போல வியந்து பார்க்கிறான் செந்தில்.

"மாலை சூட்டியிருப்பது நாங்களில்லை செந்தில்.... அவர்கள் இந்த மண்ணை சுவீகாரம் செய்தவர்கள். அந்த வள்ளங்களில் ஒன்று கூட தமிழனுடையதாக இருக்காது. இருக்கவும் விடமாட்டார்கள்."

"எங்களுக்கு முயற்சியில்லை. வல்லமையில்லை. நாலுபேர் சேர்ந்தாவது ஒரு இயந்திர படகு வாங்குகிற துணிவு இல்லை. அவனுக்கு கூலியாய் போறதுதான் எங்கடை தொழில். அதில்தான் ஒரு சந்தோசம்."

"அப்படியில்லை செந்தில் அப்படி ஆக்கப்பட்டிருக்கிறோம். சிவத்தாரைப் பற்றி சொன்னியே சிவத்தார் எப்படிப் பட்ட ஆள் தெரியுமா?"

"நீயும் சிவத்தாரோட தண்ணி அடிக்கிறனிதானே...."

செந்தில் செருகியது குத்தீட்டி. நெஞ்சக்காயம் வலித்தது. கசப்பாய் சிரித்தேன். நான் மகாத்மா இல்லை. சராசரி மனிதன் தான். தவறு என்று தெரிந்தும் விடமுடியாத பழக்கம் சிவத்தாரின் சினேகம் போல் நான் பலவீனம் உள்ளவன் தான். சில கவிஞர்களை மது எப்படி காவியம் படைக்க தூண்டுகின்றதோ அப்படியான பழக்கம் தான் எனக்கும் மதுவோடு, விரும்புகின்ற சிலதை சாதிக்க வீறுகொண்டு நிற்க தயக்கங்களையும் இறுக்கங்களையும் குலைக்க சிவத்தார் போன்ற மனிதர்களை மடக்க எப்போதாவது இடையிடையே பாவிப்பது உண்டுதான்.

மதுவுக்கும் எனக்கும் உள்ள உறவின் எல்லை எனக்குத் தெரியும். அந்த எல்லை மீறினால் பகைவரும் எனக்குத் தெரியும். எனவே அளவோடு நிறுத்திக் கொள்கிற வழக்கமும் உண்டு. ஆனால், இதை எல்லாம் உனக்கு விளக்கத் தேவையில்லை. உனக்கு என்னை முற்றாய் புரியும். புரிந்தும் ஏன் இந்த ஈட்டி? செந்திலும் சிவத்தாரை செவ்வையாக உணர்கிறானோ? அந்த உணர்வில் தான் எப்போதாவது சிவத்தாரோடு கூடிக் குடிப்பதை குத்திக் காட்டுகின்றானோ?

சிவத்தார் மறுபடியும் யாழ்ப்பாணம் போட்டாரெல்லே.... ஏன் தெரியுமா? செந்தில் சிரிக்கிறான். "நீ தான் அவருடைய கையாள். சொல்லன் கேட்பம் என்கிறான்."

"கையாள்...."

செந்திலுக்கு இன்றைக்கு என்ன வந்தது? ஏன் என் மீது தொடர்ச்சியான சீண்டல் எறிகணைகளை வீசுகின்றான்....

செந்தில் உனக்கு அவரை பிடிக்காது. அது எனக்கு தெரியும். அவர் நல்லவர் என்று கதையை தொடங்கினாய், பிறகு குடிகாரனாக்கினாய், இப்ப என்னை கையாள் ஆக்கிறாய். ஏன் உனக்கு இவ்வளவு கோபம்....?

செந்தில் என் தோள் தட்டி சிரித்தான். மச்சான் நீ நல்லாய் உணர்ச்சி வசப்படுகிற பேர்வழி. உனக்குள்ளேயும் சிவத்தாரைப் பற்றி ஏதுவோ புகைகின்றது. சோழ மகாராஜன் ஆண்ட நீலக் கடலில் ஆரோ தோரணம் கட்டுகின்றான் என்று கொஞ்ச நேரம் குமைந்து சிவத்தாரை மறுப்பினாய். சிவத்தாரில் உனக்குள்ள சீற்றத்தை மறைக்கத்தான் நீ தோரணம் பற்றி பேசுகிறாய்.

நான் மனசில் குப்பிறப்படுத்து கன்னத்தில் கைத்தாங்கி நெடு மூச்சு எறிந்தேன். அவன் சொல்வதும் சரிதானோ? செந்திலிடம் எல்லாம் சொல்லத்தான் வேண்டும். எனக்குள் நேற்று நடந்தவை பின்னோட்டம் இடப்படுகின்றன.

சிவத்தாரின் கையில் கடிதம். மாதக் கணக்கில் யாழ்ப்பாணக் கடிதத்தை காணாது தவித்த பின் வந்த கடிதம். ஒரே அறைக்குள் எதிர் எதிராய் நானும் அவரும். மேலே மெலிதாய் சுழல்கின்ற மின் விசிறியையும் மீறி அவரது நெற்றி வியர்க்கின்றது. முடி இழந்த முன் மண்டையில் குழல் விளக்கின் ஒளித்தெறிப்பில் வியர்வை முத்துக்கள் பளிச்சிடுகின்றன. கடிதத்தை வாசித்து முடித்து நிமிர்ந்த மனிதரின் கண்கள் சிவந்திருக்கின்றன. இலக்கில்லாத பார்வை எங்கோ சஞ்சரிக்க கண்ணாடியை கழற்றி துடைக்கின்றார். வலதுகை நெற்றி வியர்வையை வழித்தெறிய குழலை மறந்த பெருமூச்சுக் கனமாய் வெளிப்படுகின்றது.

அவரே சொல்ல வேண்டும். என்ன பிரச்சனை என்று திடுமென கேட்பது அழகாக இருக்காது. ஆனால், கேட்கவும் வேண்டும். என் விழிகள் வினாவோடு அவர் மீது நிலைக்கின்றன. உதடுகள் ஐயா என மெல்ல இழுக்கின்றன.

அவர் கீழ் உதட்டைக் கடிக்கிறார். வலதுகையை முஷ்டி ஆக்கி இடதுகையில் குத்துகிறார். கடுங்கோபத்தின் அடையாளம். எழுந்து சாவிக் கொத்தை என்னிடம் வீசுகின்றார். "நான் வர கொஞ்சம் சுணங்கும் எல்லாவற்றையும் நீயே பார்த்துக் கொள்."

அடுத்த கணம் அவர் வெளியே போய் விட்டார்.
அதன் பின் கடமை நேரம் முடியும் வரை சிவத்தார் வரவேயில்லை. வேலை முடிந்ததும் அவரது அறையை நோக்கி போனேன் நான். அறையில் சிவத்தார் பயணப்பையை அடுக்கிக் கொண்டிருந்தார்.

"தம்பி விடிய நான் பயணம்" அவரே வாய் திறந்தார். யாழ்ப்பாணம் தான் போகிறார் என விளங்கியது. இப்போது வியர்வை இல்லை; கண்களில் சிகப்பு இல்லை. ஆனால், முகத்தில் தளர்ச்சி இருந்தது. வாயில் லேசான 'வாடை' வீசிறது.

"விடுமுறை....?"

"நான் பெரியவரிட்ட சொல்லிட்டன் [illegible] விடுமுறைதான் [illegible] வருவன் என்று தெரியாது."

"சாவிக்கொத்து....?"

"நீயே வைத்துக்கொள். நான் வரு மட்டும் நீதான் பொறுப்பு. பெரியவரிட்ட சொன்னனான் அவரும் சம்மதிச்சிட்டார்."

"எனக்கு ஒன்றும் விளங்குதில்லை ஐயா....?"

[illegible]

[illegible]

"இப்ப மற்றவனும்" என்றாரே அதற்கென்ன அர்த்தம்? [illegible]

[illegible]

[illegible]

சிவத்தாருக்கும் கடிதம் இருந்தது. "[illegible] தப்ப விட்டுட்டன். அது நான் [illegible] எழுதியிருக்கிற போல" என விசமச் சிரிப்போடு கூறிய மனிதர் கடிதத்தை பிரித்தார். நான் ஏதோ வேலையில் மூழ்கியவன், மேசை மீது குத்தும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்தேன். சிவத்தார் உருத்திர மூர்த்தியாய் நின்றிருந்தார்.

தொடர்ச்சி 13ம் பக்கம்....

ஐரோப்பாவில் இலங்கைத் தமிழர் நவீன யூதர்களா?

தாயகத்தில் இருந்து வெளியேறிய தமிழர்கள் "நவீன யூதர்கள்" ஆவார்களா ? இரண்டாம் உலகமகா யுத்தத்தையடுத்து தமக்கென ஒரு நாடில்லாத நிலையில் யூதர்கள் நாசிகளின் படுகொலைக்கு இலக்கானதோடு உலகமெங்கும் அலைந்து திரிந்ததுபோல "அக்கரைப் பச்சைகளை" நாடி மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு படையெடுத்த தமிழர்களும், அவர்களின் வாரிசுகளும், வழித்தோன்றல்களும் அவல வாழ்விற்கு உள்ளாக நேருமா? என்ற கேள்விகள் அண்மைக்காலத்தில் பிறப்பெடுத்துள்ளன.

மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று, சுவிட்சலாந்திலிருந்து கொழும்பு வந்து, இலங்கைத் தமிழ் அகதிகளைக் கட்டம் கட்டமாக திருப்பி அனுப்புவது குறித்து ஆராய்வு நடத்தி திரும்பியுள்ளது.

ஜேர்மனியில், வெளிநாட்டவர்கள் தங்கியுள்ள முகாம்களின் மீது தாக்குதல் சம்பவங்கள் அதிகரிக்கின்றன. "ஸ்கின் கெட்ஸ்" என்று அழைக்கப்படும் வலது சாரித் தீவிரவாதிகளுக்கு ஆதரவு வலுக்கின்றது. இவர்கள் வெளிநாட்டவர்கள் மீது அவ்வப்போது தனிப்படக் கொலை செய்வது, தாக்குதல் நடத்துவது, தஞ்சம்கோரியிருப்போரின் வீடுகளைத் தாக்குவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்.

"டென்மார்க்கில் அகதிகள் முகாம்களில் தங்கியிருப்பவர்களை, திருப்பி அனுப்புவது என்று அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான சில முன்னறிவித்தல்கள் அகதிமுகாம்களில் இருப்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
இவை அண்மையில் வந்த செய்திகளில் சிலவாகும்.

அகதிகளாக, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றவர்கள் அங்கிருந்தும் அகதிகளாக மீண்டும் தாயகம் நோக்கிவரும் நிலை உடனடியாக வரும் என்று கூறமுடியாவிட்டாலும் அதற்கான சாத்தியப்பாடுகள் அதிகரிப்பதற்கு கட்டியம் கூறுபவையாக இத்தகைய செய்திகள் உள்ளன.
ஜேர்மனியைப் பொறுத்தவரையில் 1990இல் இரண்டு ஜேர்மனிகளும் ஐக்கியப்பட்டதைத் தொடர்ந்து நவநாஜிகள் என்போர் பலம்பெற்று வருவதும், தடுத்து நிறுத்த முடியாமல் நீடிக்கும் அகதிகளின் படையெடுப்பும், ஐக்கியத்தின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் வெளிநாட்டவர்கள் மீது வெறுப்பு வளர்வதற்குத் தூபமிடுவதாக இருக்கின்றது.

அண்மையில், ரொங்டொக் நகரில் நடந்த சம்பவம் ஜேர்மன் பொலிசாரையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. அங்கு வெளிநாட்டு அகதிகள் தங்கியிருந்த முகாம், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜேர்மன் இளைஞர்களால் சுற்றி வளைத்துத் தாக்கப்பட்டது. இவர்களின் தாக்குதல்களில் இருந்து அவ்விடுதியைப் பாதுகாக்க நான்கு இரவுகள் ஜேர்மன் பொலிசார் பெரும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. கம்பேர்க் போன்ற தூர இடங்களிலிருந்து கொண்டுவந்து இறக்கப்பட்ட கலகக்காரர்கள் உள்ளூர் மக்களின் உதவியுடன் தாக்குதல் நடத்தினர். கலகக்காரர்கள் ஒருங்கிணைந்து தாக்கவும், பொலிஸ் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும் ரேடியோக் கருவிகளை (தொடர்புச் சாதனம்) கூடப் பயன் படுத்தியுள்ளனர். இதன் காரணமாக, இந்தத் தாக்குதலை ஒரு கொரில்லாப் போர் என்று மெக்லன் பேர்க் மாநில பொலிஸ் தலைவரான சிக் பிறைட் கோர்ட்ஸ் வர்ணித்துள்ளார். நல்லவேளையாக இவ்வாறு தாக்கப்பட்ட வெளிநாட்டவர் முகாமில் இலங்கைத் தமிழர் இருக்கவில்லை. அங்கு ருமேனியாவிலிருந்து வந்த ஜிப்சி அகதிகளே தங்கியிருந்தனர்.

ஜேர்மனியில் 1991ம் ஆண்டில் மட்டும் மூன்றாம் உலக நாடுகள், மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த அகதிகளுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் 990 நிகழ்ந்துள்ளன. இது அதற்கு முந்திய ஆண்டில் நடந்த சம்பவங்களை விட நான்கு மடங்கு அதிகம் என்பதும், நாற்பது ஆண்டுகாலம் கம்யூனிஸ்ட் ஆட்சி நீடித்த கிழக்கு ஜேர்மன் பகுதியில் 493 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், வெளிநாட்டவர்கள் அதிகரிப்பு பற்றிய அச்சத்தைப் பரப்புவது தேர்தல்களின்போது வாக்குகளைக் கவரும் அம்சமாகவும் விரிவடைந்து வருகிறது. இதன் காரணமாக [illegible] போன்ற [illegible] கட்சிகள் [illegible] கலம் வழங்குவதில் கடைப்பிடிக்கப்படும் தாராண்மை கைவிடப்பட வேண்டும் என்று பகிரங்கமான கோரிக்கை விடுத்து வருகின்றன.

இதேபோல, சுவிட்சலாந்திலும் வெளிநாட்டு அகதிகளின் வருகையால் வேலையின்மை வீதம் அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக பொதுவாக வெளிநாட்டவர்களுக்கும் சிறப்பாக அகதிகளுக்கும் எதிரான எதிர்ப்பு உணர்ச்சி வளர்ந்து வருகின்றது. அத்துடன், வளைகுடா யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பு, யூகோஸ்லாவிய நிலைமையினால் வரும் அகதிகளின் அதிகரிப்பு, மேலும் இலங்கையில் இருந்து வரும் தமிழ் அகதிகள் பொருளாதாரம் காரணமாகவே வருவதாக இருக்கும் சந்தேகம் என்பன போன்ற பல்வேறு அம்சங்கள் சுவிட்சலாந்தில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளைப் பாதிக்கும் விடயங்களாக உள்ளன.

எனினும், இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், லெபனான் போன்ற நாடுகளிலிருந்து வந்து சுவிட்சலாந்தில் அரசியல் தஞ்சம் கோருவோரை அக்கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டவுடன் திருப்பி அனுப்புவதுபோல இலங்கை அகதிகளை இன்னமும் திருப்பி அனுப்பத் தொடங்கவில்லை.

இவ்வாறாக ஒவ்வொரு நாட்டிலும், அந்தந்த நாட்டிற்குரிய பிரத்தியேகக் காரணங்களால் இலங்கை அகதிகள் அழையாத விருந்தினர்களாக நடத்தப்பட்ட போதிலும் இந்தியா செய்வதைப் போல் திருப்பி அனுப்பவில்லை. இந்தியாவைத் தவிர மற்ற எந்த நாடும் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் கொள்கை முடிவை மேற்கொள்ளாவிடினும் இத்தகைய முடிவை எடுக்க வைப்பதற்கான முன்னோடி செயலாகவே இந்தியாவின் நடவடிக்கையுள்ளது.

குறிப்பாக, ஐக்கியநாடுகள் சபையின் அகதிகள் நிவாரணக் கமிசனரும் இந்தியா இது விடயத்தில் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளமை மற்ற நாடுகளுக்கு ஒரு உந்து சக்தியாக இருக்கலாம்.

எது எப்படியாயினும் பொதுவாக, இந்தியா இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கிய 1992 இன் முதல் கால் பகுதியின் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் எண்ணப்பாங்கிலும் மாறுதல் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையாகும். இவ்வாண்டின் ஆரம்பத்தில் சுவிஸ் வந்தோரையும், [illegible] சம்பந்தம் உள்ளவர்களையும் திருப்பி அனுப்புவதில் சுவிஸ் தீவிரமாகச் சிந்திக்கின்றது.

எனவேதான் இந்த நிலையில், "ஊரெங்கும் அகதி என்று அலைவோமா, அல்லது [illegible] [illegible] பெரிதென்று [illegible] வோமா" என்று கேட்கத் தோன்றுகிறது ■

நன்றி-ஈழநாதம்

விடுதலைப் புலிகள் ஜேர்மன் கிளையினரின் மே தின ஊர்வலம்

ஜேர்மனியின் கம்பேர்க் நகரில் நடைபெற்ற இவ்வூர்வலம் தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி அன்று காலை, பாம்பேர்க் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் இருந்து ஆரம்பமானது. KDP என்ற ஜேர்மன் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வூர்வலத்தில் இருபதுக்கும் மேற்பட்ட ஜேர்மன் அமைப்புக்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கலந்து கொண்டு ஜேர்மன் மக்களதும் தொழிற்சங்கங்களினதும் பெரும் வரவேற்பைப் பெற்றது.

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனதும், தமிழீழத்தினதும் பெரிய அளவிலான படங்கள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன. ஊர்வலத்தில் தமிழர்களின் கலாச்சார நடனங்களின் ஒன்றான கரகாட்டமும், மேள நாதஸ்வர இசையும் இடம்பெற்றன. தொலைக்காட்சியினரும், புகைப்படப் பிடிப்பாளர்களும் இவற்றை மிகுந்த உற்சாகத்துடன் படம்பிடித்துக்கொண்டதை காணக்கூடியதாக இருந்தது.

உலக மக்களே தமிழீழத்தை அங்கீகரியுங்கள், சிறீலங்காவுக்கு பண உதவி செய்ய வேண்டாம், சிறீலங்காவுக்கு ஆயுதம் வழங்க வேண்டாம், உல்லாசப் பயணிகளே சிறீலங்காவுக்குச் செல்ல வேண்டாம் போன்ற கோசங்களும் சிறீலங்காவின் பொருளாதாரத் தடைக்கெதிரான கோசங்களும் எழுப்பப்பட்டன.

தந்தையும் தம்பி....

நேற்றைய போலத்தான் அன்றும் சிவத்தார் உடனேயே யாழ்ப்பாணம் கிளம்பி விட்டார். யாழ்ப்பாணம் போய், கொழும்பு போய், ஆடி ஓடி அவர் மீண்டும் வேலைக்கு வர ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. கூட்டிக் கழித்து பார்க்கையில் இம்முறையும் அப்படித்தான் நடக்கும் போல் தெரிகின்றது.
செந்தில் சிரித்தான்.
"உது தான் மச்சான் சிவத்தார் ஆமிக்காரனும், நேவிக்காரனும் அலுவலகத்திற்கு வந்தால், 'அடைட் ஒவ் த வோர்' வழிந்த வழிந்த உதவி செய்யற மனிசன் சிநேகிதமோ, சிநேகிதம் இல்லையோ எங்கடை ஆட்களுக்கு உதவி செய்யிற தென்டால் 'அடி' கேட்பார் [illegible] எப்பவும் இயக்கத்தை விழுந்து கும்பிடுவார் [illegible] நாளுக்கு ஒரு நாள் சம்பளம் தர நாலுநாள் விமர்சனம் செய்வார்."
"உப்பிடியும் சனம் இருக்கத்தான் செய்யும் செந்தில். எல்லோரும் உன்னுடைய அப்பாவாய் ஆக முடியுமோ. உன்னுடைய தகப்பன் ஒரு தெய்வம். ஓ... அது பிழை... தெய்வத்தை நேரிடையாய் எங்களுக்கு தெரியாது. உன்ரை அப்பா என்னையில் ஒரு முழுமையான மனிதர், மாமனிதர்."
"நீ வழக்கம் போல் புழுகத் தொடங்கி விட்டாய்...." என என் விலாவில் செல்லமாக குத்தினான் செந்தில். "அப்பா பெரிதாய் ஒன்றும் செய்யவில்லை மச்சான். கம்பஸ்சில் ஒருவருடம் படித்த தம்பிக்கு அந்த எண்ணம் வந்தது தான் வியப்பு. பல்கலைக்கழகம் போனாலே எத்தனை கற்பனைகள்.... அவ்வளவையும் ஈழச்சிந்தனையில் முறித்து விட்டு வந்தானே.... அவனைச் சொல் எங்களுடைய வறுமையிலும் அவனை நாம் நோகாமல் செல்லமாக வளர்த்தோம். இருந்தும் கூட நோகிற மக்களுக்காக அவன் புறப்பட்டானே இதெல்லாம் இன்னும் என்னை மலைக்க வைக்குது."
"எல்லாம் சரி மச்சான் ஆனால், உன்ரை அப்பா அவர் என்ன செய்தார்? தம்பியின் விருப்பம் அறிந்த உடனே சண்டை [illegible] இல்லை [illegible] வாரா.... இல்லை அவனுடைய மனதை மாத்தப் பார்த்தாரா.... இல்லை தான் பெற்ற இந்த பெண்களான உன்னுடைய [illegible] சகோதரிகளைக் காட்டி அழுதாரா.... இல்லை."
"மனிதர் தம்பியின் விழிகளை கொஞ்ச நேரம் நேருக்கு நேர் பார்த்திருக்கிறார். பிறகு அவனுடைய தலையை வாஞ்சை யோடு தடவிவிட்டிருக்கிறார். நீ [illegible] போகலாம். அதற்கு முதல் ஒரு அலுவல் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்."
உங்களுக்கு எல்லாம் தெரியாதல்ல ஒரு திக்கு. அப்பாவின் அமைதியில் உங்களுக்குப் பயம், ஆனால் அப்பா...."
"அவர் தம்பியின் அப்பா...."

"அவர் நம்புவது முருகனை", "நூலை வதம் செய்து தேவர் துயர் தீர்த்தவனை. அவனது பக்தர் அவர்."
"உன் தம்பியை மதிய பூசைக்கு அழைத்துப் போனார். அவனது பெயரால் விசேட அர்ச்சனை செய்வித்தார். தம்பியின் நெற்றியில் தன்கையால் திலகமிட்டார். கோவிலை வீதி சுற்றி கும்பிட வைத்தார். கண்கள் பனிக்க அவன் கையைப் பற்றி 'வென்று வா மகனே' என வழி அனுப்பி வைத்தார். அந்தத் தைரியம் அது ஆருக்கடா வரும்...."

தொடர்ச்சி 14ம் பக்கம்....

"பண்பாட்டு மௌனம் கலைந்து உண்மையை நோக்க வேண்டும்"

* 'என்னால் எப்படி நடிகனாக முடிந்தது' இந்தக் கேள்விக்கு இதுவரை எனக்குச் சரியான விடை தெரியவில்லை. எங்கள் குடும்பத்தில் நாடகச் சூழல் எதுவும் இல்லை. என் பெற்றோர் நாடகம், சினிமாப் பக்கம் தலைவைத்துப் படுத்ததில்லை. வீட்டுக் கட்டுப்பாட்டை உதறி எறிந்து படம் பார்க்கவும் தைரியமில்லை. யாழ். இந்துக் கல்லூரியில் படித்தபோது ஒரு கல்விச் சுற்றுலா போனோம். அது 1948ல். அப்போதுதான் முதன் முதலாகச் சினிமா பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

எமது சொல்லாடலிலும் நடிப்பிலும் கலகலப்பற்ற இறுக்கம் ஏற்பட்டுவிடும். 1958 இல் கலைஞர் சொர்ணலிங்கத்துடன் தொடர்பு உண்டாகியது. பி. எஸ். இராமையாவின் 'தேரோட்டி மகனில்' நான் அருச்சுனனாக நடித்தேன். கலையரசு, கர்ணன் பாத்திரத்தில் தோன்றினார். அவருடன் சேர்ந்து மூன்று நாடகங்களில் நடித்தேன். இது எனக்கு ஒரு சுவாரசியமான அனுபவம்.

அந்தக் காலத்தில், சினிமாப் பாணியில் நடிப்பதுதான் வழக்கம். சினிமாவைப் பார்த்து எத்தனையோ பேர் நடிகரானார்கள்.

முப்பது வருடங்களுக்கு மேலாகத் தமிழ் நாடக உலகில் வாழ்ந்துவரும் குழந்தை மா. சண்முகலிங்கம் (வயது 61) தமிழீழத்தின் முன்னணிக் கலைஞர்களில் ஒருவர். பெருமைப்படக்கூடிய நடிகர். இளைப்பாறிய ஆசிரியரான இவர், யாழ் பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவில் பணியாற்றுகிறார். இவர் எழுதிய 'எந்தையும் தாயும்' என்ற நாடகம் தமிழீழத்தில் மட்டுமல்ல இன்று பிரித்தானியா, நோர்வே, பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் மேடையேற்றப்பட்டு பாராட்டுப் பெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

* எனக்கு விருத்தெரிந்த பருவம் முதலாய் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் தீபாவளி, வருடப் பிறப்பில் நாடகம் போடுவது வழக்கம். எங்கள் பக்கத்து வீட்டுக்கு ஒரு கிழவர் வந்து போவார். அவரைப் போல நான் பாவனை செய்து பேசியதினாலோ என்னவோ, நாடகத்தில் நடிக்கும்படி என்னைக் கூப்பிட்டனுப்பினார்கள். 1950 இல் விதானையார் செல்வரெத்தினத்துடன் (காமிக் செல்வரெத்தினம்) விகடமான பாத்திரத்தில் நடித்தேன். அது தரகர் பாத்திரம் தாங்கி நடித்ததால் அது ஒரு வாடிக்கைப் பாத்திரமாக மாறியது. இயல்பாகவே மனித சம்பவங்களினூடே நடத்திச் செல்லும் நாடகங்களிலே நடித்த எனக்கும் விதானையாருக்கும் 'ஸ்கிரிப்ட்' இருக்காது. ஆனால், மற்றவர்களுக்கு இருக்கும். நாங்கள் பலமுறை ஒத்திகை பார்ப்போம். அதனால் இந்த விடயத்தில் நானும் விதானையும் வித்தியாசமானவர்கள். யாழ்ப்பாணத் தமிழில் நாங்கள் பேசி நடித்தோம். 'இந்தியத் தமிழில்'பேசி சினிமாப் பாணியில் நடிப்பது எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. சுருங்கச் சொன்னால் நாங்கள் வேர்களை உதறிவிடவில்லை. இந்த விடயத்தில் கலையரசிடம் ஒரு களைகட்டிய இறுக்கம் இருந்தது. எழுபதுகளில் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் இரண்டு வருடங்கள் நாடகம் மற்றும் அரங்கியல் கற்கை நெறியை முடித்த பிறகு தான் பிரஞ்ஞை பூர்வமாக எதையும் ஆர்வத்துடன் செய்யும் துணிவு வந்தது.

இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு முன் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் போல் இப்போதும் நடிக்கப்படுகின்றன. பல்கலைக் கழக அரங்கம் 1970 ல் நடிகர் ஒன்றியம், 1978 ல் நாடக அரங்கக் கல்லூரி ஆகியன அறிவு பூர்வமாக ஆலோசித்து நாடகத்தைச் 'செய்கிற' நிலையை உருவாக்கியது. யாரும் நாடகம் போடலாம் என்ற நிலை தொடர்ந்தாலும் நாடகத்தைப் படிக்கலாம், நாடகப் பட்டறை மூலம் பயிற்சி பெறலாம் என்ற நிலையை நாடக உலகினர் புரிந்துகொண்டிருக்கின்றனர். இப்போதெல்லாம் க. பொ. த (உயர்தரம்), பல்கலைக்கழகம், வடமாகண சங்கீத சபைப் பாடவிதானங்களில் ஒருபாடம் என்ற நிலைக்கு நாடகம் வந்திருப்பது ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை. பன்முகப்பட்ட தாக்கங்களினால் புதிய உத்திகள் கையாளப்படுகின்றன. மண்சுமந்தமேனியர், தெருவழிஅரங்கு (தெருக்கூத்து) நாடகமான மாயமான் ஆகியன ஒரு புதிய தேடலைத் தோற்றுவித்தன.

* நாடகத்தில் பல வடிவங்கள், மோடிகள் உள்ளன. சமூகப் பார்வை, அரசியல், கலையம்சம், இனரஞ்சகத்தன்மை, கற்பனைத்திறன் ஆகிய இன்னோரன்ன அடிப்படையில் நாடகத்தில் பலமோடிகள் உள்ளன. சிருங்கார ரசம் மேலோங்கித் தோன்றும் நாயக-நாயகி பாவ நாடகம், ராஜ-ராணி நாடகம், முன்பு போடப்பட்ட சமூகநாடகங்களும் நாடகங்கள் தான்.

உரையாடல் தொகுப்பு
— மதனி —
(நன்றி-சுழநாதம்)

அந்தந்த வகைக்குரிய மோடியை அறிந்து தயாரிக்கப் [illegible] நாடகம், புதிய நாடகம் என்று பிரிப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை.

* ஆண்டு ஒன்று முதல் ஆறு வரையிலான பாடவிதானத்தில் நாடகத்துக்கு நல்ல இடம் தந்து உயிரூட்டியிருக்கிறார்கள். பாடவிதானத்தில் பேச்சுப்பயிற்சி, உடல் அசைவு, மூச்சுப்பயிற்சி, கூட்டுமுயற்சி ஆகியன உள் என. எமது கல்வி முறையில் இவற்றைப் போதிப்பதற்கான பயிற்சி ஆசிரியர்களும் இல்லை. ஆடல், பாடல்-பாதமும் சங்கீதமும் மூலம்தான் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களை அணுகுகிறார்கள். சுருங்கச் சொன்னால் ஆக்க நாடகம் (Creative Dramatics)பற்றித்தெரியாத நிலை.

* பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்கு முக்கியமாக உதவுவது சுதந்திரமான இயக்கமும் அனுபவமும், சிந்தனையுமாகும். இவற்றை நாடகக்கல்வி மூலம் பெறலாம். நாடகக்கல்வி மூலம் மாணவன் தன் கட்புலன், செவிப்புலன் மற்றும் உடல் அசைவுகளை (Kineticeffeft) விருத்தி செய்து கொள்ளலாம். உடல், உளக் குறைபாடுகள் நீங்கவும் நாடகம் உதவுகிறது. வீட்டுச் சூழலில் அடக்கப்பட்ட உணர்வுகள் வகுப்பறையில் வெளிவருகின்றன. இதை ஆசிரியர் அறிந்து கொண்டால் ஊமைத்துக்கு இடமுண்டு [illegible] சிறாருக்கு மனநிறைவைத் தருகிறது. பித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் கல்வி வளர்ச்சிக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் நாடகம் நெடுங்காலமாக ஒருபாடமாகக் கருதப்படுகிறது. ஆனால், ஆரம்ப வகுப்புகளில் பாடவிதானத்தில் நாடகமிருந்தும் இங்கு கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்படுவதில்லை. இந் நிலை மாணவர்களை எங்கே கொண்டு செல்கிறது? எங்கே என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

என்னைப் பொறுத்தவரையில் நான் நாடகங்களை எழுதும் ஆசிரியன் அல்ல. வேறு வழியில்லாமல் நான் நாடகங்களை எழுதுகிறேன். யாழ்ப்பாணத்தில் நெறியாளர், நடிகர் உருவாகிய அளவிற்கு நாடக எழுத்தாளர்கள் உருவாகவில்லை. எமது எழுத்தாளர்கள் நாடகங்கள் எழுதாமல் இருப்பது பெரிய குறை. அந்தத்துறையில் எமது மூத்த எழுத்தாளர்கள் பரிசார்ந்த முயற்சிதானும் செய்யவில்லை. அன்ரன் செக்காவ், பேர்ட்டல் பிரெஸ்ட், பெக்கர், பி. எஸ். இராமையா போன்றவர்கள் புனைகதை எழுத்தாளர்களாகவும், சமகாலத்தில் நல்ல நாடக ஆசிரியர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

* நாடகங்கள் சந்தியந்தை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும். ஒருவரின் அனுபவம் உள்ளத்தில் ஊறி வருவதாக இருந்தால் புதிய அர்த்தங்களும், புதிய பரிமாணங்களும் ஏற்பட இடமுண்டு. இது அனைத்துக் கலைகளுக்கும் பொருந்தும். நாடகம் எழுதுவது என்பது [illegible] கல்வி மூலம் நாடக எழுத்தாளனை உருவாக்க முடியாது. கல்வி தெளிவுபடுத்துவதற்கு உதவும். உலக இலக்கியங்களுக்கு நமது கதவைத் திறந்து விடவேண்டும். ஆங்கில நாடக ஆசிரியர் பேனாட் சா, சேக்ஸ்பியர், மௌலியே போன்றவர்கள் தமக்கு உதவிய மூலமோடிகள் என்கிறார்?

* கலைக்குரிய பணி சமூகத்தின் [illegible] தமிழ் சமூகம் இன்று விடுதலையை எதிர் பார்த்து நிற்கிறது. இந்நிலையில் சில கலைஞர்களிடம் பண்பாட்டு மௌனம் (Cultural silence) காணப்படுகிறது. தயங்கித் தயங்கி இராமல் நாடக ஆசிரியர்களும் நெறியாளர்களும் உணர்வால் மாற்றும் கண்டு சாதனை படைக்கும் நாடகங்களை வெளிக் கொணர வேண்டும். பண்பாட்டு மௌனம் கலைந்து நாடகங்கள் உண்மையின் வெளிப்பாட்டை நோக்கிச் செல்ல வேண்டும். ■

பொது அறிவின்றி...

நாம் கற்கின்ற அல்லது செயல்படுகின்ற துறை என்ற வரம்பிற்குள் மட்டும் நாம் ஒதுங்கி நின்றுவிடக்கூடாது. அதுவும் ஏட்டுக் கல்வியோடு நின்றுவிட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக் கொள்ள முடியாது. முழுமையான சமூக மனிதர்களாக வாழமுடியாது. அன்றாட வாழ்விற்கும் தேவைகளுக்கும் பயன்படும் வகையில் நாட்டின் நடப்பியல்புகளையும் உலகத்தின் போக்குகளையும் புரிந்து கொள்ளும் வகையில் நாம் எமது பொது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதுவே எம்மை சமூகத்திற்குப் பயனுள்ள மனிதர்களாக ஆக்கிவிடுகிறது.

இன்று, எத்தனையோ நெருக்கடிகள், இடர்ப்பாடுகள் மத்தியில் எமது மாணவ சமூகம் கல்வியைப் பயின்று வருகின்றது. இம்மாணவர்களுக்கு பொது அறிவில் ஆர்வத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படுகின்ற அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வானது, மிகவும் ஆக்கபூர்வமான முயற்சி என நான் கருதுகின்றேன்.

எமது மாணவர்கள் தமது பொது அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக பாடத் திட்டங்கள், கற்பித்தல்கள் இல்லாத நிலையிலும், பொது அறிவைத் தாமாகவே பெற்றுக் கொள்வதற்கான ஊடகங்கள் அருகிவிட்ட இன்றைய சூழ்நிலையிலும் 35 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இம்முறை இந்தப் பொதுத் தேர்வில் தோற்றியிருப்பதும், பல மாணவர்கள் மிகச் சிறந்த வகையில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியிருப்பதும் பாராட்டத்தக்க விடயமாகும்.

அந்நியனால் எமது தேசம் ஆக்கிரமிக்கப்பட்ட மிக நெருக்கடியான காலகட்டத்தில், எமது விடுதலைப் போராட்டத்தை வீறு பெறச் செய்த தற்கொடையாளி அன்னை பூபதியின் நினைவாக பொது அறிவுத் தேர்வை ஆண்டு தோறும் நடத்திவரும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, அந்தத் தாயின் நினைவு நாளில், அந்த அன்னையின் பேரில் அமைந்த கலையரங்கத்தில், சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களைக் கௌரவிப்பது சாலப் பொருத்தமாகும்.

தமிழீழ மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு மேற்கொண்டுவரும் இந்த நன்முயற்சி தொடர வேண்டும். இப் பொதுத் தேர்விலே பங்கு கொண்ட அனைத்து மாணவர்களையும் பாராட்டுவதோடு, தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வியக்கத்தக்க முறையில் தனது திறனாற்றலை வெளிக்காட்டிய 4ம் ஆண்டு மாணவன் செல்வன் வி. கோகுலனின் ஆற்றலை மெச்சுகிறேன். கோகுலனுக்கு எனது சார்பில் சிறப்புப் பரிசை வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். ■

ஸ்ரீலங்காவின்.....

வவுனியா நான்குகுளத்தில் சிறீலங்காப் படை பாதுகாப்பரண் எல்லைக்குள் ஊடுருவிச் சென்று விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் சிறீலங்கா இராணுவத்தினரும் சில ஊர்காவற்படையினர்களும் கொல்லப்பட்டதற்காகவே நிராயுதபாணியான அப்பாவிப் பயணிகள் மீது இக்கோரமான தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. ■

கிழக்கைத் துண்டு....

மாகாணத்துடன் இணைப்பது என்ற முடிவும் ஆராயப்பட்டுள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அமைதித் தீர்வுக்கு வழிகாட்டும் முகமாக, "தாயக முழுமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வு முன்வைக்கப்பட்டால் பரிசீலிக்கத் தயார்" என விடுத்த அறைகூவல் சர்வதேச சமூகத்தின் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வறிவிப்பின் அடிப்படையில் அரசியல் தீர்வு காணும்படி பல நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் சிறீலங்கா அரசை வற்புறுத்துகின்றன. இதனைச் சமாளிப்பதற்காகவே இப்புதிய தமிழர் தாயகத்தைத் துண்டாடும் திட்டத்திற்கு சிறீலங்கா உயிரூட்டி வருகின்றது.

அத்துடன் இப்பொழுதுள்ள பிரச்சனை இருதேசிய இனங்களுக்கிடையிலான [illegible] பிரச்சினையல்ல. வெறும் சிறுபான்மை-பெரும்பான்மை இனப் பிரச்சினை தான் என்பதையும் இத்திட்டம் நிலை நாட்டுகிறது. மேலும், எதிர்வரும் ஜூன் 10 திகதி முதல் [illegible] பாராளுமன்றத் தெரிவுக்குழு [illegible] தொடர்களை சிறீலங்காவின் புதிய ஜனாதிபதி [illegible] தொடர்ந்து எழுதும் போவதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. அச்சமயம் இப்புதிய தீர்வு வெளியிடப்பட்டு, எஞ்சியுள்ள 10 பிரிவுகளையும் வடக்குடன் இணைத்து தீர்வு போலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட இருப்பதாக உத்தியோகப்பற்றற்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஆர்ஜென்டீனா [illegible] மட்டக்களப்பில், மக்கள் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைவதாகவும், தம்மைத் துன்புறுத்துவதாக மக்கள் கருதுவதாகவும் கூறியுள்ளார். ■

தந்தையும் தம்பி...

அவன் வீட்டில் நடந்ததை நான் வீட்டுக் காட்சி [illegible] கண்கள் ஆறாய் சொரிகின்றன. அதை கவனித்த படியே தொடர்கின்றேன் நான்.

"ஆனால், சிவந்தார்..."

"மூத்தவன் இயக்கத்துக்கு ஒத்தாசையாய் ஓடித் திரிகிறான். இரவு சென்றிக்கு படுக்கிறேன் என்று கள்ளமாய் போறான்... [illegible] கையில் கிடைத்ததுடன் யாழ்ப்பாணம் பறந்து மகளை மடக்கி கொழும்புக்கு கொண்டுபோய் பிரான்சுக்கு அனுப்பி... இப்ப மூத்தவன் பிரான்சிலானை கடையுக்கு மாறி சுளை சுளையாப் பணம் அனுப்புகிறான்."

"மனிதன் விதம் விதமாக நடிக்கிறான்."

இப்ப மற்றவனுக்கும் அது தான் பிரச்சனையாக இருக்கும்.

"இனி அவனும் கவிசோ... பிரான்சோ..."

"ஆனால் செத்தில், தம்பியைப் போலவோ தம்பியின் தகப்பனைப்போலவோ ஆக்களை காணுகிறது அருமை. அந்த அருமைகளின் வீட்டிலை எனக்கு உள்ள சிநேகிதம் இருக்கு. உண்மையில் எனக்குள்ள ஒரே பெருமையும் அது தான் போல தெரியுது." ■

நிகழ்வும் நினைவும்

- திலீபன் -

தமிழ் அமைப்புக்களுக்கு... இன்றே கண் விழித்திடுங்கள்!

தமிழீழத்தில் தாய்மார்கள், குழந்தைகளின் போசாக்கு நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ் மாவட்டத்தில் மட்டும் சரியான பராமரிப்பு இல்லாமையினால் அடுத்த ஆண்டுக்குள் 3000 குழந்தைகள் இறந்துவிடுவார்கள் என்று மருத்துவ நிபுணர்களின் கணிப்பொன்று தெரிவிக்கின்றது.

இத்தகவல் எமக்கு ஒரு அபாய எச்சரிக்கையினை விடுக்கின்றது. தமிழீழத்தின் எதிர்காலச் சந்ததி ஒரு 'நோய்வாய்ப்பட்ட' சந்ததியாக மாறிவிடுமோ என்ற கவலையினையும் ஏற்படுத்துகின்றது.

[illegible]

ஐக்கிய நாடுகள்.....

[illegible]

நிலாநந்தன்

நாளொன்றோ?

[illegible]

எம் தேசத்தின் உதய காலம்!

வானம் சிவந்திருக்கிறது
வாகனங்கள் விரைகின்றன
வானமும் இரைகின்றது
சூரியன் அஸ்தமிக்கிறது
ஆயினும்....
காகங்கள் கரைகின்றன
'செல்' எனும் சேவல்கள்
கூவிச் செல்கின்றன
புலிவீரர் விரைகின்றனர்
ஆம்.....
இதுவொரு தேசத்தின்
உதய காலம்!

தூயவள

எம் தேசத்தின் உதய காலம்!

வானம் சிவந்திருக்கிறது
வாகனங்கள் விரைகின்றன
வானமும் இரைகின்றது
சூரியன் அஸ்தமிக்கிறது
ஆயினும்....
காகங்கள் கரைகின்றன
'செல்' எனும் சேவல்கள்
கூவிச் செல்கின்றன
புலிவீரர் விரைகின்றனர்
ஆம்.....
இதுவொரு தேசத்தின்
உதய காலம்!

தூயவள

Printed by Observer Group Newspapers